SEP. 51

375

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மிகச் சிறந்த நவநாகரீக நகைகள்
சுவர்ண மாளிகை நகைகள்
நாணயம், வேலைப்பாடு, உத்திரவாதம்
பி.எ.ராஜு செட்டியார் & பிரதர்
போன்: 268
கோயமுத்தூர்
தந்தி: ராஜா
BHARAT STUDIO

REGISTRAR OF BOOKS
8 - NOV 1951



உங்கள் உள்ளத்தைக்
கொள்ளைகொள்ளும்

கண்ணன்
தீபாவளி மலர்

ஜிலு ஜிலு என்று
தயாராகிறது

நவம்பர் மாத இதழ்தான்
தீபாவளி மலராக,
தீபாவளி அன்றே
வெளிவருகிறது.

இன்றே உங்கள் ஊர் ஏஜெண்டிடம் சொல்லி வையுங்கள். பிறகு போன வருஷம் மாதிரி கிடைக்க வில்லை என்று குறை சொல்லாதீர்கள்.

மானேஜர்-கண்ணன்-மயிலாப்பூர்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 2 இதழ்: 9

குழந்தைகளே! .. .. பக்கம் 3
பேனாத் திருடன் - என்.எஸ்.ஸ்ரீ. .. 4
சென்னையில் கண்ணன் கழகம் .. 9
சின்னராஜா - 'வாசகன்' 13
ஃகுரு ஆட்டம் - கே. சீதாராமன் .. 19
எண்ணிலே படங்கள் - 'மூட்டை' .. 20
குட்டிக் கதைகள் - ராமசர்மா .. 21
ஸ்டண்ட் படம் - எஸ்.வி. ரமணி .. 24
ஆசை வேண்டாம் - சரோஜா .. 30
லோபியும் தங்கமும் - சோமசன்மா .. 34
பொறுமைத் தீ - 'நீலம்' 37
நீ எழுதவேண்டுமா? - 'தம்பி' .. 40
கண்ணன் கழக அங்கத்தினர்கள் .. 43
கிரிக்கெட் கற்றுக்கொள் - ராம்சிங் .. 45
பாப்பா அழாதே - அழ.வள்ளியப்பா .. 49
பொழுது போக்கு - டி. வி. ஆர். .. 50
டைம்பீஸ் பரிசுப் போட்டி 51
கேட்டீர்களா! 52
கண்ணன் தபால் 53

வருஷ சந்தா ரூ. 3/-
கலைமகள், மஞ்சரி, கண்ணன்
குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும்
கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

இந்த இதழில் ஒரு முக்கிய மான விளம்பரத்தை நீங்கள் பார்ப்பீர்கள். கண்ணன் தீபாவளி மலர் பற்றிய விளம் பரமே அது. ஆம்; கண்ணன் தீபாவளிமலர் இந்த வருஷமும் உண்டு. போன வருஷத்து மலரைவிட அருமையாக, பிர மாதமாக ஜிலு ஜிலு என்று வரப் போகிறது. உங்கள் உள்ளத் தைக் கொள்ளை கொள்ளும் பல அம்சங்கள் நிறைந்திருக்கும். இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். பிறகு அந்தச் சம யத்தில், "எங்களுக்குக் கிடைக்க வில்லையே!" என்று போன வரு ஷம் மாதிரி எழுதாதீர்கள். நவம் பர் 1-ஆம் தேதி வரவேண்டிய கண்ணன்தான் இரண்டுநாள் முன்னதாகத் தீபாவளி மலராக வரப்போகிறது. விலையும் போன வருஷத்தைவிட ரொம்ப அதிக மாக இருக்காது. நீங்கள் எல்லா ரும் வாங்கிப் படிக்கக்கூடிய விலை யாக வைக்கவேண்டும் என்பது எங்களுக்குத் தெரியாதா?

இந்த இதழில் 'பேறைத் திரு டன்' என்ற புதிய தொடர்கதை ஒன்று ஆரம்பமாகிறது. கதை போகப் போக, "என்ன ஆச்சு, என்ன ஆச்சு?" என்று கேட்கும் படி ரொம்ப விறுவிறுப்பாக இருக் கும். நீங்களே படித்துப் பார்த்து விட்டு எனக்கு எழுதப்போகிறீர் கள்! மேலும் ஒரு புது அம்சம் ஆரம்பிப்பதாகச் சொல்லியிருந் தேன், ஞாபகமிருக்கிறதா? அது வும் தீபாவளி இதழ் முதல் ஆரம்பமாகும். ஆகஸ்டுமாதத் தில் மதுரையில் கூட்டம் நடத்து வதாக இருந்ததல்லவா? ஒழிவு ஏற்படுத்திக்கொள்ள முடியாத காரணத்தால் அதைச் சிறிது ஒத் திப்போட வேண்டியதாகிவிட் டது. ஆயிற்று; மலர் வேலை யைத் தொடங்கிவிட்டோம். தீபா வளி கழிந்த சூட்டோடு சூடாகக் கட்டாயம் மதுரையில் கூட்டம் நடக்கும்.

பிறகு இன்னொரு முக்கிய அறி விப்பு: இந்த இதழில் ஒரு பரிசுப் போட்டி வெளியாகியிருக்கிறது. சென்னையில் நடந்த கூட்டத் துக்கு வந்திருந்த ஒரு பெரியவர், "ஆகா, குழந்தைகளுக்காக இப் படி ஒரு சங்கமா? அதை இவ் வளவு அழகாகவும் பயன்படும் படியாகவும் நீங்கள் நடத்துகிறீர் களா? பேஷ், பேஷ்!" என்று மூக் கின்மேல் விரலை வைத்து ஆச்சரி யப்பட்டுப் போனார். ஆனந்தம் தாங்காமல், "இதோ பாருங்கள்; உங்களுக்குச் செலவு ரொம்ப ஆகியிருக்குமே! என்னுடைய அன்பளிப்பாக இருக்கட்டும்!" என்று வீட்டுக்குப் போனதும் இருபது ரூபாய்க்கு ஒரு செக்கை, போன இதழில் வெளி யான கடிதத்துடன் அனுப்பி வைத்தார். இவ்வளவு அன்போ டும் ஆர்வத்தோடும் அனுப்பிய பணத்தைத் திருப்பியனுப்புவது மரியாதையா? "சரி; வந்தனம். இந்தப் பணத்தை ஒரு பரிசுப் போட்டி வைத்து, அதில் முதல் பரிசு பெறும் குழந்தைக்குக் கொடுக்கிறோம். உங்கள் விருப் பம் என்ன?" என்று எழுதினோம். "ரொம்ப சரி!" என்று எழுதிவிட் டார் அவர். அதன்படிதான் 'டைம்பீஸ் பரிசுப் போட்டி' ஏற் பாடு செய்யப்பட்டது. பரிசு கிடைத்தால் உங்கள் பரீக்ஷை சமயத்தில் இது எவ்வளவு உப யோகமாக இருக்கும்! எழுதுங் கள்; எல்லாரும் இந்தப் போட்டி யில் கலந்துகொண்டு எப்படியா வது பரிசைத் தட்டிக்கொண்டு போக முயலுங்கள்!

—ஆசிரியர்

பேனாத் திருடன்

என். எஸ். ஸ்ரீ.

1

ஆயிற்று; பாடசாலை விட இன்னும் ஐந்து நிமிஷம் தானிருக்கிறது. 'ட்ரில் கிளாஸி' லிருந்து பிள்ளைகள் வகுப்புக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். கோபு தன் மடியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டான். அவன் மனசு 'திக் திக்' என்று அடித்துக்கொண்டது.

புத்தம் புதிய பவுண்டன் பேனா! அவனுக்கு நன்றாகத் தெரியும். நேற்றுத்தான் அதை ராமு வாங்கினான். இன்று அதை அவன் தொலைத்து விட்டு வீட்டுக்குச் சென்றால், தகப்பனார் அவனுடைய தோலை உரித்து உப்பைத் தடவி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார். அதுவும் அவனுக்கு நன்றாகத் தெரியும். வெகுநேரம் யோசனை செய்தான். அவன் தகப்பனாரோ வாங்கிக் கொடுக்கமாட்டேன் என்கிறார். இதை விட்டால் இனி இவ்வளவு வசதியான தருணம் வாய்க்காது. ராமு கவனப் பிசகாகப் பேனாவைக் கீழே வைத்துவிட்டு ட்ரில் கிளாஸிற்குப் போய் விட்டான். கோபுவைத் தவிர வேறு பிள்ளைகள் யாரும் அப்பொழுது அங்கே இல்லை. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தவனாய் அதை மடியில் எடுத்து வைத்துக்கொண்டான்.

பேனாவில் ராமுவின் பெயர் இருக்கிறது. 'இருந்தாலென்ன? அரக்குத்தானே! சிறிது நெருப்பில் காட்டினால் உருகிவிடுகிறது. அப்பொழுது பெயர் தெரியாமல் அழித்துவிட்டால் போகிறது' என்று அந்த அபாயத்திலிருந்து தப்பித்துக்கொள்ளவும் வழி கண்டு பிடித்துவிட்டான்.

ட்ரில் கிளாஸில் அந்தப் பேனா கீழே விழுந்து விடாமலும், அது தன்னிடம் இருப்பது யாருக்கும் தெரியாதபடியும் பார்த்துக்கொண்டு அந்த நாற்பத்தைந்து நிமிஷமும் அவன் சமாளித்தது கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

ட்ரில் கிளாஸ் முடிந்து பிள்ளைகள் யாவரும் வகுப்புக்கு வந்துவிட்டார்கள்.

கோபுவின் பார்வையெல்லாம் ராமுவின் மீதே இருந்தது.

ராமு தன் ஜேபியைப் பார்த்தான். உடனே கீழே குனிந்தான். புத்தகங்களைப் பிரித்துப் பார்த்தான்.

"ஸார்! ஸார்!" என்றான்.

பிள்ளைகள் வீட்டுக்குச் செல்லும் ஆரவாரத்தில் ராமுவின் குரல் அங்கே உட்கார்ந்து 'காம்போஸிஷன்' நோட்டுப் புத்தகங்களைத் திருத்திக்கொண்டிருந்த உபாத்தியாயரின் காதில் விழவில்லை. மற்றப் பிள்ளைகள் காதிலும் விழவில்லை. ஆனால் கோபுவின் காதில் மாத்திரம் கணீரென்று ஒலித்தது. காதில் விழுந்ததோடு மட்டுமில்லை; மனத்திலும் சுரீரென்றது.

மறுபடியும் ராமு, "ஸார்! ஸார்!" என்று கத்தினன்.

உபாத்தியாயர் திரும்பிப் பார்ப்பதற்குள் வெளியே சென்றுவிட வேண்டுமென்று கோபு எண்ணினன். புத்தகங்களை எடுத்துக் கொண்டான். ஒன்றுமே தெரியாதவன் போல வெளியே செல்ல ஆரம்பித்தான். அறையின் வாசற்படியண்டை வந்துவிட்டான். இன்னும் அரை நிமிஷம் இருந்தால் போதும், கம்பி நீட்டிவிடலாம்.

ஆனல் அதற்குள் உபாத்தியாயர் குரல வந்த திசையை நோக்கி, "என்னடா அது?" என்ருர்.

"என் பேனவைக் காணேம் ஸார்!" என்ருன் ராமு.

"என்னது! பேனவைக் காணேமா? சரியாகப் பாருடா" என்ருர்.

"பார்த்து விட்டேன் ஸார்! காணேம் ஸார்!" என்ருன் ராமு.

உடனே உபாத்தியாயர், "யாரும் வெளியே போகக் கூடாது. எல்லாரும் அவன் அவன் இடத்தில் இருங்கள்" என்று உத்தரவு போட்டு விட்டார்.

இந்த வார்த்தை கோபுவின் தலையில் இடி விழுந்தமாதிரி இருந்தது. அதற்குமேல் வெளியே போக முடியுமா? போனல்தான் விடுவார்களா! மிகுந்த கஷ்டத்துடன் உள்ளே இருந்த பயத்தை வெளிக்குக் காட்டாமல் ஒன்றுமே

அறியாதவன் போல் தன்னுடைய இடத்தில் போய் நின்று கொண்டான்.

உடனே உபாத்தியாயர் ராமுவின் அருகில் வந்து, "சரியாகப் பாரடா புத்தகங்களை" என்றார்.

"பார்த்து விட்டேன் ஸார்!" என்று சொல்லிக்கொண்டே புத்தகங்களை யெல்லாம் அவர் எதிரில் இன்னொரு தரம் பிரித்துப் பார்த்தான்.

"நேற்றுத்தான் ஸார் வாங்கினது. புத்தம் புதிய பேனா ஸார்!" என்றான்.

"மத்தியான்னம் வரும்போது கொண்டு வந்தாயோ? ஒரு வேளை வீட்டிலேயே வைத்துவிட்டு வந்து விட்டாயோ என்னவோ?" என்றார் அவர்.

"கொண்டு வந்தேன் ஸார்! 'காம்போஸிஷன்' கூட அதனால் தானே எழுதினேன்" என்றான் ராமு.

"கொண்டு வந்தான் ஸார்! நான் பார்த்தேன் ஸார்!" என்றான் பக்கத்துப் பையன்.

"ஒரு வேளை ட்ரில் கிளாஸிலே..." என்று உபாத்தியாயர் முடிப்பதற்குள், "நான் அதை ட்ரில் கிளாஸிற்கு எடுத்துக்கொண்டு போகவில்லை ஸார்! இங்கேயேதான் வைத்துவிட்டுப் போய்விட்டேன் ஸார்!" என்றான் ராமு.

"அப்படியானால் எங்கேடா போய் விடும்? நான் தான் இங்கேயே உட்கார்ந்துகொண் டிருக்கிறேனே. இங்கு வேறு யாரும் வரவில்லை!" என்று சொல்லிவிட்டு, "ராமுவின் பேனாவைக் காணோமாம். யாராவது எடுத்தீர்களா? இருந்தால் கொடுத்துவிடுங்கள்" என்றார்.

"எனக்குத் தெரியாது; நான் எடுக்கவில்லை ஸார்", "அவன் பேனா வைத்திருந்ததே எனக்குத் தெரியாது ஸார்!" என்ற பல குரல்கள் ஒரே காலத்தில் எழும்பின.

"எதற்கும் எல்லாருடைய புத்தகங்களையும் நன்றாகப் பார்த்து விடுங்கள்" என்றார் உபாத்தியாயர்.

உடனே எல்லாரும் அவரவர்களுடைய புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் எல்லாவற்றையும் பிரித்துப் பார்த்தார்கள். எல்லாரையும் போல் கோபுவும் தன்னுடைய புத்தகங்களையும் நோட்டுப் புத்தகங்களையும் பிரித்துப் பார்த்தான். அவைகளுக்குள் அந்தப் பேனா இல்லை என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் தான் குற்றவாளி அல்ல என்று எல்லாரும் நினைப்பதற்காக அவ்விதம் செய்தான்.

பெஞ்சுகளின் கீழ், மேஜைக்குள், ஓர் இடம் பாக்கி இல்லாமல் பார்த்தாகிவிட்டது. சில பிள்ளைகள் தங்கள் சட்டைகளையெல்லாம் கூட உதறிக் காட்டிவிட்டார்கள்.

பேனாவைக் காணோம்!

"இங்கே வைத்துவிட்டுப் போன பேனா எங்கேயடா போய்விடும்? கால் முளைத்துப் போய்விடுமா என்ன? யாராவது எடுத்திருந்தால் கொடுத்து விடுங்கள். ஒன்றும் செய்யவில்லை. இல்லை யென்றால் தெரியுமோல்லியோ? பிச்சு எடுத்து விடுவேன், பிச்சு; ஆமாம்!" என்று புருவத்தை நெறித்துக்கொண்டு அழுத்தந் திருத்தமாகச் சொன்னார் உபாத்தியாயர்.

"நான் எடுக்கவில்லை ஸார்!", "நான் எடுக்கவில்லை ஸார்!" என்று மறுபடியும் பல குரல்கள் எழுந்தன. கோபுவும் 'கும்பலோடு கோவிந்தா' போட்டு வைத்தான். ஆனால் அவன்

குரலில் மாத்திரம் மீதிப் பிள்ளைகளின் குரலில் காணப்பட்ட சகஜ நிலைமை காணப்படவில்லை. அதில் பயமும் நடுக்கமும் காணப்பட்டது. ஆனால் மீதிப் பிள்ளைகளின் சத்தத்தில் இந்த நடுக்கம் மங்கிவிட்டது.

“அப்படியானால் யாரும் பார்க்கவில்லை?” என்றார் உபாத்தியாயர் மீண்டும்.

“பார்க்கவில்லை ஸார்!” என்றார்கள் பிள்ளைகள்.

“ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம். இப்பொழுதே சொல்லி விடுகிறேன். யாராவது தெரியாமல் எடுத்திருந்து இப்பொழுது கொடுத்து விட்டால் ஒன்றும் செய்யாமல் மன்னித்து விடுவேன். அப்புறம் அகப்பட்டுக்கொண்டால்....அவர்கள் கதி என்ன ஆகுமோ எனக்குத் தெரியாது” என்று எச்சரித்தார் உபாத்தியாயர்.

இதற்கு யாரும் எவ்விதப் பதிலும் சொல்லவில்லை. சிறிது நேரம்

நிச்சப்தம் நிலவியது அந்த அறையில்.

மறுபடியும் உபாத்தியாயர், வகுப்பில், 'திருடுகள்' என்று பெயரெடுத்துள்ள சில பிள்ளைகளைக் கூப்பிட்டு, "நீங்கள் பார்த்தீர்களா?" என்று கேட்டார்.

"எங்களுக்குத் தெரியவே தெரியாது ஸார்! நாங்கள் பார்க்கவே இல்லை ஸார்!" என்று சொல்லிவிட்டார்கள் அவர்கள்.

உடனே உபாத்தியாயர் ராமுவை நோக்கி, "உன் பேனாவுக்கு என்னடா அடையாளம்?" என்று கேட்டார்.

"என் பெயர் போட்டிருக்கிறது ஸார், அதில்" என்றான் ராமு.

"சரி, நான் விசாரிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு, "எல்லாரும் போகலாம்!" என்றார் உபாத்தியாயர்.

தலையிலிருந்து பெரிய பாரம் கழிந்த மாதிரி இருந்தது கோபுவுக்கு. உபாத்தியாயர், ஒவ்வொரு பிள்ளையினிடமும் வந்து சட்டை, வேஷ்டியெல்லாம் சோதனை செய்ய ஆரம்பித்துவிட்டால் என்ன செய்கிறது என்று நடுங்கிக்கொண்டிருந்தான். நல்ல வேளை; அந்த 'அசட்டு' உபாத்தியாயர் அவ்விதம் செய்யவில்லை. இதற்காகப் பிள்ளையாருக்கு நான்கு தேங்காய்கள் உடைப்பதாகச் சொல்லிக்கொண்டான்.

"எல்லாரும் போகலாம்" என்று உபாத்தியாயர் சொன்னதுதான் தாமதம். பார்க்கவேண்டுமே, கோபு சென்ற வேகத்தை!

'நேராக வீட்டுக்குச் செல்ல வேண்டியது. தீப்பெட்டியை எடுக்கவேண்டியது. தீக்குச்சியைக் கொளுத்தி, பேனாவில் உள்ள பெயர் தெரியாமல் செய்துவிட வேண்டியது. பேனா எது என்று பெற்றோர்கள் கேட்டால் வழியில் அகப்பட்டது என்று சொல்லிவிட வேண்டியது' என்று மனசுக்குள் திட்டமும் போட்டுக்கொண்டான்.

பாடசாலையில் எத்தனையோ தரம் ஓட்டப் பந்தயம் வைத்திருக்கிறார்கள். ஆனால் ஒரு தரமாவது கோபு அதில் கெலித்தது கிடையாது. ஆனால் இப்பொழுது அந்தப் பந்தயம் வைத்திருந்தால் கோபுவுக்குத்தான் முதல் 'பிரைஸ்' கிடைத்திருக்கும். அவ்வளவு வேகமாக ஓடினான்.

ஆயிற்று; வீடு சேர இன்னும் சிறிது தூரம்தான் இருக்கிறது. அப்பொழுது யாரோ, "கோபு! கோபு!" என்று கூப்பிடும் சத்தம் கேட்டது.

காது கேட்காதது போல் திரும்பிப் பார்க்காமலே போய் விட வேண்டுமென்று போய்க்கொண்டிருந்தான்.

மேலும் சத்தம் அருகில் கேட்கவே திரும்பிப் பார்த்தான்.

அவனுடைய வகுப்புப் பிள்ளைகள் இரண்டு பேர் அவனை நோக்கி ஓடி வந்துகொண்டிருந்தார்கள்.

இவர்களைப் பார்த்ததுதான் தாமதம்; கோபுவின் தலை கிறுகிறுவென்று சுழன்றது.

(தொடரும்)

பொழுதுபோக்கு விடைகள்:

இ. வ. 1. நடராஜர். 3. சங்கு. 5. கோயில். 6. வில். 10. கொம்பு. 11. தீ.
மே. கீ. 1. நந்தி. 2. ராஜா. 3. சல்லடை. 4. குரங்கு. 7. காளாம்பி. 8. சேவல். 9. தும்பி.

சென்னையில் கண்ணன் கழகம்

ஜூலை மாதம் 29-ஆம் தேதி கண்ணன் கழகத்தின் கூட்டம் ஒன்று மயிலாப்பூரில் நடந்தது. சென்னையிலுள்ள 1600 குழந்தைகளுக்குமேல் வந்திருந்தார்கள். ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. விகடக் கச்சேரியும் பப்ரமிண்ட் பொட்டலமும் ஆரஞ்சுக் கிரஷூம் குழந்தைகளின் உள்ளத்தையே தித்திக்க வைத்தன. "சென்னையிலேயே மறுபடியும் கூட்டமா?" என்று மற்ற ஊர்க் குழந்தைகள் வெகு காரசாரமாக எழுதியிருக்கிறார்கள். அவர்கள்கூட இந்த நண்பர்களின் படத்தைப் பார்த்ததும் தங்கள் கோபத்தை மறந்து, தாங்களும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டதுபோலவே எண்ணுவார்கள் என்று நம்புகிறோம். மேலே சம்ஸ்கிருத காலேஜ் மைதானத்துக்குக் குழந்தைகள் வந்தபோது எடுத்த படம்.

போட்டோ: சங்கர், சங்கரநாராயண்.

கண்ணன்

(மேல் வரிசைப் படங்கள்) அங்கத்தினர்களில் சிறுவர்கள் ஒரு பிரிவாகவும் சிறுமியர் ஒரு பிரிவாகவும் நிற்கிறார்கள்.

(நடுவில் உள்ள படங்கள்) வட்டப் பந்து விளையாட்டுக்களில் இரண்டு பிரிவாரும் மாற்றி மாற்றி விளையாடி மார்க்குகள் பெற்றுக்கொள்கிறார்கள்.

(கீழ் வரிசைப் படங்கள்) கல்லை விட்டுக் காலைக் கீழே வைக்காமல் நடந்து எல்லைக்குப் போகிறாள் இன்னொரு பெண். கண்ணைக் கட்டிக்கொண்டு யானைப் படத்தின் முகத்தில், சரியான இடத்தில் கண்ணைப் பொருத்துகிறாள் ஒரு பெண்.



1. விகடக் கச்சேரி ஜரூராக நடக்கிறது.

2. அதோ, விநியோகம் செய்யும் ஆரஞ்சுக் கிரஷ் ரொம்ப ஜில்லென்று இருக்கிறது!

சின்னராஜா

வாசகன்

10. காட்டுக்கு நடுவில்

காட்டுக்குள்ளே சிறிது தூரம் ஓடின பிறகு சின்னராஜா ஓர் இடத்தில் நின்று கொண்டான். காட்டுக்குள் இருட்டில் போவது சுலபமான காரியம் அல்லவே! மறுபடியும் சாலையைப் பிடித்துக் கொண்டு போவதுதான் நல்லது என்று தோன்றியது. அவன் இப்போது திக்குத் தெரியாத காட்டில் இருந்தான். எந்தத் திக்கில் எவ்வளவு தூரத்தில் சாலைவழி இருக்கிறது என்பதே அவனுக்கு இப்போது தெரியாது. விடிந்து போனால் தெரியும். அதுவரைக்கும் சின்னராஜா காட்டிலேயே காத்திருக்க முடியுமா?

அங்கே அரண்மனையில் விடிந்தால் பகைவர்கள் புகுந்துவிடுவார்கள். முதல் காரியமாகக் கோட்டைச் சுவரின்மேல் ஏறிக் குதித்துக் கோட்டைக் கதவைத் திறந்துவிடுவார்கள். பிறகு அரண்மனையைத் தாக்குவார்கள். அரண்மனையைத் தாக்குவதற்குள்ளாவது அவன் தன் தகப்பனாருடன் போய்ச் சேர்ந்தால்தான் எல்லோரையும் காப்பாற்ற முடியும். அவன் தகப்பனார் தஞ்சையில் சோழ மகாராஜாவோடு இருக்கிறார். அவன் இருக்கும் இடத்துக்கும் தஞ்சைக்கும் எத்தனை மைல் என்பதே அவனுக்குத் தெரியாது. அவன் நடந்து தஞ்சாவூருக்குப் போவதென்பது முடியாத காரியம். பின், எப்படி மார்த்தாண்ட மன்னரை அடைவது?

இந்த யோசனையில் சின்னராஜா சிறிது நேரம் ஆழ்ந்தான். அவன் இயற்கையிலே தைரியசாலி. ஆகையால் மறுபடியும் உற்சாகத்தை வருவித்துக்கொண்டான். சாலையைக் கண்டுபிடித்துவிட்டால் நடுவில் எங்காவது ஊர் இருக்காதா? அங்கே யாரிடமாவது சொல்லி ஒரு குதிரையை இரவலாக வாங்கிக் கொண்டு போகலாம் என்று எண்ணினான்.

அவனுடைய தகப்பனாரைத் தெரியாதவர்கள் அந்தப் பக்கத்தில் யாருமே இல்லை. அவரிடம் எல்லோருக்குமே அன்பு இருந்தது. ஆகையால் அவர் பேரைச் சொல்லி, இப்போது நேர்ந்திருக்கும் ஆபத்தையும் தெரிவித்தால் யாரும் உதவி செய்வார்கள் என்ற உறுதி அவனுக்கு இருந்தது. இனிமேலும் வீணாக நின்று யோசனை செய்து காலத்தைப் போக்குவது தவறு என்று அவனுக்குப் பட்டது. உடனே வேகமாக நடக்கத் தொடங்கினான்.

சிறிது தூரம் போயிருப்பான்; அதற்குள் ஏதோ சத்தம் கேட்டது. யாரோ வாய்க்குள்ளே முணுமுணுத்துப் பாடுவதுபோல இருந்தது.

அவன் பகைவர்களைச் சேர்ந்தவனாக இருப்பானோ என்ற பயம் முதலில் சின்னராஜாவுக்கு உண்டாயிற்று. "இது ஏது, எங்கே போனாலும் ஆபத்தின் மேல் ஆபத்தாக வருகிறதே!" என்று மனசுக்குள் சொல்லிக்கொண்டான். ஆனாலும் தைரியத்தை விடவில்லை. 'அப்படித்தான் எதிராளியாக இருந்தால் என்ன? நாம் ஆலூர்க்காரனென்று அவனுக்குத் தெரியப் போகிறதா? யார் என்று கேட்டால் ஏதாவது பொய் சொல்லித் தப்பித்துக்கொள்ளலாம்' என்று சமாதானம் செய்துகொண்டான். 'நாம் வெகுதூரம் வந்துவிட்டோம். இங்கெல்லாம் விரோதிகள் வர இடம் இல்லை. வரவும் மாட்டார்கள். வந்தால் இங்கே உள்ளவர்கள் நம் அப்பாவிடம் அன்புடையவர்களாயிற்றே; அவர்கள் விரோதிகளைச் சும்மாவிடுவார்களா?' என்று நினைத்தான். அதோடு சேர்ந்து மற்றொரு யோசனையும் அவனுக்கு உண்டாயிற்று. 'இந்தப் பக்கத்தில் உள்ள ஊருக்குச் சென்று, கோட்டேர்க்காரர்களின் அக்கிரமத்தையும், ஆலூர்க்கோட்டைக்கு வந்திருக்கும் ஆபத்தையும் எடுத்துச் சொல்லிப் பல பேர்களைக் கூட்டிக்கொண்டு வந்து கோட்டேர்க்காரர்களை எதிர்க்கச் சொன்னால் என்ன?' என்பது தான் அந்த யோசனை. அது நடக்கிற காரியமா? அவரவர்களுக்கு எத்தனையோ வேலை. அதோடு எல்லோருக்குமே சண்டைபோட வருமா? இதெல்லாம் பைத்தியக்கார யோசனை. 'நேரே அப்பாவிடம் போவதுதான் சரி' என்ற முடிவுதான் பொருத்தமாகத் தோன்றியது.

சின்னராஜா மறுபடியும் யோசனையில் ஆழ்ந்து நின்றிருந்தான். அதற்குள் ஆள் சத்தம் கேட்டது. 'யாராக இருந்தால் என்ன? போய்ப் பார்த்துச் சாலை எங்கே இருக்கிறது என்று கேட்கலாம்' என்ற துணிவு அவனுக்கு உண்டாயிற்று. சத்தம் வந்த திக்கை நோக்கிப் போனான். பாதி ராத்திரிக்குமேல் சந்திரன் உதயமாகும் நாள் அது. அப்போது சந்திரன் மேக மூட்டத்தினிடையே மறைந்திருந்தான். அதனால் மங்கிய ஒளி இருந்தது. அந்த ஒளியில் எதிரே வந்தவனுடைய உருவம் ஒருவாறு மங்கலாகத் தெரிந்தது. தலையில் பெரிய முண்டாசும் தோள்மேல் கோடாலியுமாக அவன் வந்துகொண்டிருந்தான். அவன் நடையிலிருந்து சிறிது வயசானவன் என்று தெரிந்தது.

சின்னராஜா அவனைப் பார்த்தவுடன், காட்டில் மரம் வெட்ட வந்திருக்கிறான் என்று தெரிந்துகொண்டான். அதோடு பாதி ராத்திரிக்குமேல் பொழுது ஆகிவிட்டதென்றும், விடிய இன்னும் இரண்டு மூன்று மணி நேரமே இருக்குமென்றும் ஊகித்துக்கொண்டான். அதிக நேரம் இல்லை என்று தெரிந்தபோது அவனுக்கு வேகம் அதிகமாயிற்று. அந்தக் கிழவனிடம் போனான். "தாத்தா, தாத்தா, சாலை இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது?" என்று கேட்டான். கிழவன் அந்த நேரத்தில் ஒரு சிறுவனைக் காட்டில் சந்தித்ததே இல்லை. சின்னராஜா கேட்ட கேள்வியைக் கூட அவன் வாங்கிக்கொள்ளவில்லை. அவனைக் கண்டவுடனே கிழவன் திடுக்கிட்டுவிட்டான்.

"என்ன, என்ன?" என்று உளறினபடியே கேட்டான் கிழவன்.

"சாலை எங்கே இருக்கிறது என்று கேட்டேன்" என்றான் சின்னராஜா.

"நீ யார்? காட்டிலே வாழும் மோகினியின் பிள்ளையா? நிசத்தைச் சொல்லிவிடு, நான் மிகவும் வயசானவன். நான் எந்த விதமான தவறும் செய்யவில்லை" என்று கிழவன் சொன்னான். காட்டிலே மோகினிப் பிசாசுகள் உண்டென்று அவன் கேட்டிருக்கிறான். ஆனால் நம்பியதில்லை. இந்த அழகான பையன் இந்த நேரத்தில் ஊரிலிருந்து வர நியாயமில்லை. ஆகவே மோகினிப் பிசாசின் குழந்தையாக இருக்கலாமோ என்ற பயத்தோடு கிழவன் பேசினான்.

"என்ன தாத்தா, மோகினி, கீகினி என்று சொல்கிறாய். நான் சின்னராஜா" என்றான் சிறுவன்.

"சின்னராஜாவா! அது யார்? இங்கே என் வந்தாய்? உள்ளதைச் சொல்லிவிடு. நானும் ஏதாவது குற்றம் செய்திருந்தால் சொல்லிவிடுகிறேன். மோகினியின் பிள்ளை தானே நீ?"

அந்தக் கிழவன் கல்வி அறிவு இல்லாதவன் என்றும், அப்பாவி என்றும் சின்னராஜா தெரிந்துகொண்டான். முதலில் கிழவன் வருவதை உணர்ந்தபோது சின்னராஜா பயந்தான். இப்பொழுதோ

சின்னராஜாவைக் கண்டு கிழவன் பயம் கொண்டான். அவன் பயத்தைத் தெளிவித்தால்தான், தன் கேள்விக்குப் பதில் கிடைக்கும் என்று சின்னராஜா தெரிந்துகொண்டான்.

“நான் ஆவூர் ராஜாவைத் தேடிக்கொண்டு போகிறேன். ஆவூரைப் பகைவர்கள் முற்றுகை போட்டிருக்கிறார்கள். என்னைக் கண்டு நீ பயப்பட வேண்டியதில்லை” என்றான் சின்னராஜா.

“ஆ! ஆவூர் ராஜாவா! அவர் இப்போது தஞ்சாவூரில் அல்லவா இருக்கிறார்? என்ன தம்பி, ஒரேயடியாகக் கொட்டி அளக்கிறாயே! அவரை நீ எப்படிப் போய்க் காண்பாய்?”—கிழவனுக்கு இப்போது பயம் தெளிந்துவிட்டது.

“அதற்குத்தான் என்ன வழி என்று யோசித்தேன். உன் உதவியால் ஏதாவது வழி கிடைக்கும் என்று நம்புகிறேன். இரண்டு விஷயம் உன் மூலமாக நான் தெரிந்துகொள்ள வேண்டும். ஒன்று: தஞ்சாவூர் போகும் சாலை இங்கிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது? இரண்டாவது: இங்கே பக்கத்து ஊர்களில் யாரிடமாவது நல்ல குதிரை இருக்கிறதா?”

கிழவன் சின்னராஜாவை மேலும் கீழும் பார்த்தான். அவன் மிகவும் வேகத்தோடு இருப்பது கிழவனுக்குத் தெரிந்தது. ஆகையால் அவன் அந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தொடங்கினான்:

“தம்பி, நான் முதலில் உன்னைக் கண்டு பயந்தது மெய்தான். இப்போது உன் சங்கடத்தைத் தெரிந்துகொண்டேன். கண்ணாலே கண்டதை அப்படியே நம்ப முடிகிறதா? கண்ணாலே கண்டதும் பொய், காதாலே கேட்டதும் பொய் என்று தெரியாமலா பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்? இந்தக் காலத்துப் பிள்ளையாண்டான்களுக்குப் பெரியவர்களின் வாக்கில் நம்பிக்கை கிடையாது. எல்லாம் குருட்டு நம்பிக்கை என்று சொல்கிறார்கள். நானும் எத்தனையோ பேர்களைப் பார்த்துவிட்டேன். அடே அப்பா! யாரையும் சட்டைசெய்யாமல் அதிகாரம் பண்ணின மகாராஜாக்களெல்லாம் அதோகதியாய்ப்போய்விட்டார்கள். மகாராஜா என்றா சொன்னேன்? நான் ஆவூர் மகாராஜாவைப்பற்றி அப்படிச் சொல்வதாக எண்ணிவிடாதே. சேசே! அப்படிச் சொல்லலாமா? சொன்னால் நாக்கு வெந்துவிடாதா? ஒன்று சொல்கிறேன் தம்பி; கேட்டு வைத்துக்கொள். நாக்கு வெந்து போவதுண்டு. வெற்றிலை பாக்குப் போடும்போது கிளிஞ்சில் சுண்ணாம்பை மட்டும் வாங்கிப் போட்டுக்கொள்ளாதே. போட்டுக்கொண்டாயோ, நாக்கு வெந்துவிடும். நான் என்ன செய்கிறது தெரியுமா? எந்தப் பயல் என்ன சொன்னாலும் சரி, கல்லுச் சுண்ணாம்புதான் எனக்கு வேண்டும்...” கிழவன் பேச்சு எங்கெங்கோ சுற்றியது. கடைசியில் சாலைக்கு வழிமாத்திரம் அந்தக் கிழவன் சொன்னபாடில்லை. ஆகவே சின்னராஜா நடுவிலே மறித்துக் கேட்கவேண்டியிருந்தது.

“தாத்தா, தாத்தா, உன் கதைகளையெல்லாம் அப்புறம் கேட்டுக்கொள்கிறேன். இப்போது, முதலில் தஞ்சாவூர்ச் சாலை எந்தப் பக்கத்தில் இருக்கிறது? அதைச் சொல்” என்றான்.

"என்னப்பா தம்பி, நான் ஏதாவது கதை சொன்னால் எங்கள் ஊரில் எத்தனை பேர் வாயில் ஈ புகுந்தது தெரியாமல் கேட்டுக் கொண்டிருப்பார்கள், தெரியுமா? அது மாத்திரமா? பஞ்சபாண்டவர் வனவாசம் பாடினேனானால் பக்கத்து வீட்டுக் கிழவிமாரெல்லாம் வந்து கூடிவிடுவார்கள்."

கிழவன் பேசப் பேசச் சின்ன ராஜாவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. பஞ்சபாண்டவர் வனவாசத்தை இப்போது பாடப் பிடித்துக்கொண்டால் அதற்கு முடிவு காணமுடியுமா? "நான் அவசரமாகப் போக வேண்டும், தாத்தா; எனக்கு வழி சொல்" என்று மறுபடியும் கேட்டான்.

"அடேடே, சாலை எங்கே இருக்கிறதென்று நான் சொல்லவில்லையா? அதோ கூப்பிடு தூரத்தில்தான் இருக்கிறது. தஞ்சாவூர் பதினாறு மைல். எங்கள் ஊர் இரண்டு மைலில் இருக்கிறது."

"உங்கள் ஊரில் யாரிடமாவது நல்ல குதிரை உண்டா?

"என்ன அப்படிக் கேட்கிறாய்? எங்கள் எசமான் முத்துசாமி வன்னியர் குதிரையைப் பார்த்துவிட்டுப் பேசு. நல்ல குதிரை என்று இந்த உலகத்தில் வேறு குதிரை உண்டா என்பது தெரியவரும். காற்றாய்ப் பறக்கும். வாரத்துக்கு இரண்டு தடவை தஞ்சாவூருக்கு எசமான் போவது எப்படி?"

கிழவன் தன்னை விட்டால் போதும் என்றாகிவிட்டது சின்ன ராஜாவுக்கு. "ரொம்ப சந்தோஷம் தாத்தா. நான் போய் வருகிறேன். உனக்கு மிகவும் சிரமம் கொடுத்துவிட்டேன்" என்று சொல்லி, மறுபடியும் கிழவன் எதையாவது ஆரம்பித்துவிடப் போகிறானே, என்ற பயத்தால் உடனே புறப்பட்டுவிட்டான்.

"அடே, முயல் குட்டி மாதிரி அல்லவா இருக்கிறாய்? சரி, சரி; நேற்று நான் கண்ட முயலைப்

பற்றி...'' கிழவன் ஏதோ பேசிக் கொண்டே இருந்தான். அதைக் கேட்க அங்கே யார் இருக்கிறார்கள்?

சின்னராஜா கிழவன் காட்டின பக்கத்தில் போனான். சாலை அருகிலேதான் இருந்தது. இரண்டு மைல் தூரம் நடந்து சென்று முத்துசாமி வன்னியரைப் பார்த்துக் குதிரை கேட்கலாம் என்று தீர்மானித்துக் கொண்டான். அந்தப் பக்கத்தில் சின்னச் சின்னப் பணக்காரர்கள் பலர் இருந்தார்கள். அவர்களில் பலர் குதிரைகள் வைத்திருந்தார்கள். மார்த்தாண்ட மன்னருக்கு வேண்டியவர்கள் பலர். முத்துசாமி வன்னியரும் அத்தகையவர்களில் ஒருவரே.

சின்னராஜா அவரைப் போய்ப் பார்த்தான். விஷயத்தைச் சுருக்கமாகச் சொன்னான். அவர் சின்னராஜாவை இன்னாரென்று அறிந்தவுடன், அவனுடைய தைரியத்தை மெச்சினார். பேச்சை வளர்த்தாமல் உடனே தம் குதிரையைக் கொண்டு வந்து நிறுத்தச் சொன்னார். "ஜாக்கிரதையாகப் போய் வாருங்கள். மகாராஜாவிடம் என் நமஸ்காரத்தைச் சொல்ல வேண்டும். நானே இந்தச் சமாசாரத்தைப் போய்த் தெரிவிப்பேன். ஆனால் இங்கே அவசியமான வேலை ஒன்று இருக்கிறது'' என்றார். சிறு பையன் ஆனாலும் ராஜாவின் பிள்ளையாதலால் மரியாதையாகப் பேசினார்.

சின்னராஜாவுக்குப் பதிலாக யாராவது ஆட்காரனைத் தஞ்சாவூருக்கு அனுப்பியிருப்பார். ஆனால் சின்னராஜா சம்மதிக்கவில்லை. தானே நேரில் போனால்தான் விஷயத்தை விளக்கமாகச் சொல்ல முடியும் என்று சொன்னான். ஆகவே முத்துசாமி வன்னியர் சின்னராஜாவைப் பிரயாணப்படுத்தி அனுப்பினார். அவன் குதிரையைத் தட்டிவிட்டான். அது கடக் கடக்கென்று ஓடத் தொடங்கியது.

(தொடரும்)

கிராப்பு: நான் தீபாவளி அன்று பிறந்தேன். அதனால்தான் தீபாவளியின்போதெல்லாம் விடுமுறை விடுகிறார்கள்!

குடுமி: பூ! இவ்வளவுதானா? வருஷத்துக்கு ஒரு முறை விடுமுறை விடுவது என்ன அதிசயம்? நான் ஞாயிற்றுக்கிழமை பிறந்தேன். அதனால்தான் வாரத்துக்கு ஒரு நாள் விடுமுறை விடுகிறார்கள்; தெரியுமா?



ஸ்க்ரூ ஆட்டம்

கே. சீதாராமன்

நீங்கள் ரெயில்வண்டி ஆட்டத்தை ஆடிப் பார்த்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இம்மாதம் நீங்கள் இது வரையில் ஆடாததும், ஆட்டத்திற்கு ஏற்ற பெயரும் உடைய இந்த ஆட்டம் எப்படி என்று பாருங்கள். உஷார்! வேகமாக ஓடினால், ஆட்டம் தலை கிறுகிறுக்கும்.

ஆடும் முறை: மொத்தக் குழந்தைகளை மூன்று அல்லது நான்கு பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ளுங்கள். தொடங்கும் (Starting) கோட்டில் முதலில் ஓடும் பிள்ளை நிற்கவேண்டும். அந்தப் பிரிவிலுள்ள மற்றப் பிள்ளைகள் ஒவ்வொரு வட்டத்திலும் உட்காரவேண்டியது. இது போலவே மற்றப் பிரிவுகளில் உள்ள பிள்ளைகள் தயார் செய்துகொள்ள வேண்டும். இதுதான் முன்னேற்பாடு. தலைவர் 'ஒன், டு, திரீ' என்று சொல்லியவுடன் தொடங்கும் கோட்டில் உள்ள பிள்ளைகள், வட்டத்தில் உட்கார்ந்துகொண்டு இருக்கும் பிள்ளைகளை, படத்தில் காட்டியது போல் சுற்றிச் சுற்றி ஓடிவந்து, கடைசியில் திரும்பும் கோட்டை அடைந்து, தொடங்கும் கோட்டிற்கு ஓடிவரவேண்டும். பிறகு அந்தப் பையன் நெ. 6 வட்டத்தில் போய் உட்காரவேண்டும். இப்படி ஒவ்வொரு குழந்தையும் ஓடிப் பூர்த்தி செய்யவேண்டும். எந்தப் பிரிவு முதலில் ஆட்டத்தை முறைப்படி செய்து முடிக்கிறதோ அதுவே ஜயக்கொடி நாட்டிய பிரிவாகும்.

ஆடுங்கள் குழந்தைகளே! ஆடிப் பாடிக் களியுங்கள்!

எண்ணிலே படங்கள்

(1 முதல் 9 வரை) 'மூட்டை'



குட்டிக் கதைகள்

ராமசர்மா

1. ஒரு ஜாடி எறும்புகள்

ஒரு நாள் ஒரு மனிதன் தன் மனைவியிடம், "மலைமேல் உள்ள அரசமரத்தடியில் நிறைய வெள்ளி நாணயங்களுடன் ஒரு ஜாடி புதைக்கப்பட் டிருக்கிறது. அதற்குமேல் ஒரு பெரிய கருங்கல் போட்டு மூடப்பட்டிருக்கிறது. இன்று சாயங்காலமே அதைத் தோண்டி எடுத்துவிட வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் பொழுது விடிந்ததும் போவோம் என்று வந்துவிட்டேன்" என்று ரகசியமாகச் சொல்லிக்கொண் டிருந்தான்.

இதை ஒட்டுக் கேட்டுக்கொண் டிருந்த அண்டை வீட்டுக்காரன், அப்போதே அங்கிருந்து ஓடினான். மரத்தடியில் இருந்த ஜாடியைத் தோண்டி எடுத்தான். இருட்டு வேளை. ஜாடியைத் திறந்தான். ஜாடிக்குள்ளிருந்து எறும்புகள் கையைக் கடித்து விட்டன. உடனே ஜாடி நிறைய எறும்புகள்தான் இருக்கின்றன என்று எண்ணி அதை அப்படியே மூடி எடுத்துக்கொண்டு வீட்டுக்கு ஓடி வந்தான். அடுத்த வீட்டுக் கூரைமேல் ஏறி நாலு ஓடுகளைப் பிரித்து, அப்படியே அந்த ஜாடியைக் கவிழ்த்தான். அவ்வளவு எறும்புகளும் தன்னை ஏமாற்றிய அந்த வீட்டுக்காரன்மேல் விழுந்து கடிக்கவேண்டும் என்பது அவன் நோக்கம். ஆனால் அதற்குப் பதிலாகப் 'பொல பொல'வென்று நாணயங்கள் விழுந்தன! தூங்கிக்கொண் டிருந்த வீட்டுக்காரன் எழுந்து மனைவியை எழுப்பி, "இதோ பார். கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுக்கிறது!" என்றான். அதைக் கேட்டு ஏமாந்த சோணகிரி ஆச்சரியத்துடன் ஜாடிக்குள் கையை விட்டான். அவனுக்குக் கிடைத்த கூலி ஒரே ஒரு நாணயம்தான்!



—சீனக் கதை.

2. அசட்டுக் கணக்கு

ஓர் அசடன் மூங்கில் கொம்பு ஒன்றைச் சுமந்து கொண்டு நகரக் கோட்டை வாசல் வழியாக நுழைந்தான். அந்தக் கொம்பு நீளமாக இருந்தபடியால் கோட்டை வாசற்படியில் மாட்டிக்கொண்டு விட்டது. அதை வெளியே எடுக்கத் தெரியாமல் அசடன் திண்டாடினான். அப்போது ஒரு புத்திசாலி அந்த வழியாகப் போனான். அசடனுடைய கஷ்டத்தைக் கண்டதும் அவன் மதில் மேல் ஏறி, மூங்கில் கொம்பை வளைத்து இழுத்தான். உடனே அது வெளியில் வந்து விட்டது. அதைக் கண்ட அசடனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. உடனே அந்தப் புத்திசாலியுடன் சிநேகம் பிடித்துத் தன் மகளை அந்தப் புத்திசாலியின் மகனுக்குக் கல்யாணம் செய்து கொடுப்பது என்று முடிவு செய்தான். வீட்டுக்கு வந்ததும் மனைவியிடம் தன் முடிவைத் தெரிவித்தான். அப்போது அவள், "அந்தப் பையனுக்கு என்ன வயது?" என்றாள். அசடன், "சரியாக இரண்டு வயது" என்றான். மனைவி தன் விரலை மடக்கி எண்ணிவிட்டு, "நம் பெண்ணுக்கு ஒரு வயது ஆகிறது. பையனுக்கு இரண்டு. சரியாக இரண்டு மடங்கு பெரியவன். நம் மகளுக்கு இருபது வயது ஆனால் அவனுக்கு நாற்பது ஆகும். அவளை அப்படிப்பட்ட கிழவனுக்கா கொடுப்பது? வேண்டவே வேண்டாம்!" என்றாள்.

இப்படியாகப் புருஷனுக்கும் மனைவிக்கும் சண்டை வந்து விட்டது. அப்போது அண்டை வீட்டுக்காரி ஒருத்தி வந்து மத்தியஸ்தம் செய்தாள்: "ஏன் அம்மா இப்படிச் சண்டை போடுகிறாய்? அடுத்த வருஷம் உன் மகளுக்கு இரண்டு வயது ஆகிவிடும். அப்போது அவளும் அந்தப் பையனும் சம வயதாயிருப்பார்கள்!" என்றாள் அவள்.

—சீனக் கதை

3. செம்படவனும் திருடனும்

ஓர் ஊரில் ஒரு செம்படவன் இருந்தான். அவன் தினம் தவளைகளைப் பிடித்து விற்பது வழக்கம். அவனுக்குப் பெண்டாட்டி பிள்ளைகள் இல்லாததால் கொஞ்சம் பணம் சேர்த்திருந்தான்.

ஒரு நாள் இரவு அவன் வீட்டுக்கு ஒரு திருடன் வந்தான். செம்படவன் தூங்கிக்கொண் டிருக்கும்போது திருடன் சுவரில் கன்னம் வைத்து உள்ளே நுழைந்தான். அப்போது தூங்கிக்கொண்டிருந்த செம்படவன், "ஆ! அப்படி வா வழிக்கு! நீ வருவாய் என்று எனக்குத் தெரியும்!" என்றான். அதைக் கேட்ட திருடன் திடுக்கிட்டான். "டேய், தாவாதே! உன்னை விடமாட்டேன்!" என்றான் செம்படவன். தூங்கும் மனிதனுக்குத் தான் வருவது எப்படித் தெரிந்தது என்று திருடனுக்கு ஆச்சரியமாயிருந்தது. மறுபடியும் செம்படவன் குரல் கேட்டது: "இப்போது கல்லின்மேல் போய் உட்கார்ந்துகொண்டு விட்டாய்!" இதைக் கேட்டதும் திருடன் பீதியடைந்து ஓட்டம் பிடித்தான். ஓடும்போதே அவன் காதில், "ஓடாதே! ஓடாதே! மரியாதையோடு வலையில் வந்து விழுந்துவிடு!" என்ற வார்த்தைகள் ஒலித்தன. திருடன் திரும்பிப் பாராமல் ஓடினான்.

மறுநாள் பொழுது விடிந்ததும் செம்படவன் தன் வீட்டில் கன்னம் வைத்திருப்பதைக் கண்டான். ஆனால் ஒரு சாமானும் திருட்டுப் போகவில்லை. இரவில் தவளை பிடிப்பதாகக் கனவு கண்டு பிதற்றியதுமட்டும் அவனுக்குத் தெரியும். அதைக் கேட்டுப் பயந்துகொண்டுதான் திருடன் ஓடிவிட்டான் என்பது அவனுக்குத் தெரியாது.

—சீனக் கதை.

பையன்: எல்லாரும் நான் சொல்றபடி கேட்டால் உங்களுக்கு எல்லாம் ஒன்னு கிடைக்கும் என்று சொன்னயே. எனக்கு என்ன கிடைச்சுது தெரியுமா?

பெண்: தெரியும்; எனக்குக் கிடைச்சதுதான் உனக்கும் கிடைச்சிருக்கும்.

பையன்: எனக்கு உதையல்லவா கிடைத்தது!

ஸ்டண்ட் படம்

எஸ். வி. ரமணி

அன்று பள்ளிக்கூடத்துக்கு வந்தது முதல், மணியும் முத்துவும் ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொள்வதும், 'களுக், களுக்' என்று சிரித்துக்கொள்வதுமாகவே இருந்தார்கள். முதல் நாள் அவர்கள் 'பிரேவ் கேர்ல்' என்ற புதிய ஆங்கிலப் படம் பார்க்கப் போயிருந்தார்கள். அவர்கள் ஊருக்கு ஆங்கிலப் படமே வந்ததில்லை. இதுதான் முதல் தடவை.

"என்ன படம்டா அது, அப்படி ரொம்ப நன்றாயிருந்தது?" என்றான் கோபு.

"'பிரேவ்கேர்ல்' என்ற ஆங்கிலப் படம்டா. முழுக்க முழுக்கச் சிரிப்பும், ஸ்டண்ட் வேலையும்தான். அடே அப்பா! அந்தப் புலிவேட்டை ஒன்றே போதும்!" என்று கையையும் காலையும் ஆட்டிக்கொண்டு கூறினன் முத்து.

"கொஞ்சம் சொல்லுடா" என்று கெஞ்சினன் கோபு.

அதற்குள் கோபுவின் சிநேகிதன் ரகுவும் வந்துவிட்டான்.

"நான் சொல்றேன்; அப்புறம் சிரித்து வயிற்றை வலிக்கிறது என்று என் மேலே யாரும் பழி போடக்கூடாது" என்று மணி எச்சரிக்கை செய்தான்.

"இல்லேடா" என்றார்கள் கோபுவும் ரகுவும்.

"அந்தப் பொண்ணு எப்படி அந்த மூணு புலியையும் சுட்டாள் தெரியுமா? அடடா! பார்க்க இந்தக் கண்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே. எங்கே, கொஞ்சம் ஸ்டைலா அவள் போனமாதிரி நடந்து காட்டுடா முத்து!" என்றான் மணி.

'டக் டக்' என்று செருப்புக் காலைப் பூமியில் உதைத்து, முகத்தைக் கம்பீரமாக வைத்துக்கொண்டு நடந்து காட்டினன் முத்து.

அதைப் பார்த்ததும் கோபுவுக்கும் ரகுவுக்கும் 'எப்படியாவது போய்ப் பார்த்துவிட வேண்டும்' என்ற ஆவல் ஏற்பட்டது.

கோபு ரகுவைப் பார்த்து, "அடே, ரகு! இதைக் கட்டாயம் போய்ப் பார்க்கணும்! ரொம்ப ரொம்ப வேடிக்கையாக இருக்கிறதே!" என்றான்.

"எப்படிடா போக முடியும்?" என்றான் ரகு கவலையுடன்.

"அதுதாண்டா யோசிக்கிறேன்" என்றான் கோபு.

பத்து முறை ஒலித்த பள்ளிக்கூட மணி கோபுவின் யோசனையைக் கலைத்தது. வகுப்பு ஆரம்பமாயிற்று. கோபுவுக்கு அன்று படிப்பின் மேலேயே கவனம் செல்லவில்லை. அவன் மனம், 'இன்று எப்படி ஸினிமாவுக்குச் செல்வது' என்பதைப் பற்றியே யோசனை செய்துகொண்டிருந்தது. ரகுவை அடிக்கடி திரும்பிப் பார்த்தான். அவனும் இவனைப்போலவே புஸ்தகத்தைச் சாய்வு மேஜைமேல் பிரித்து வைத்துவிட்டு, கன்னத்தில் இரண்டு கைகளையும் முட்டுக்

கொடுத்துக்கொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

டியூஷன் வாத்தியாருக்கும் பெற்றோர்களுக்கும் டிமிக்கி கொடுத்து விட்டு ஸினிமாவுக்கு எப்படிப் போவது? இதற்குத் தகுந்த யோசனை அவர்கள் இளம் உள்ளத்தில் எழவேயில்லை. 'ஹைட்ரோஜன் பாம்' கண்டுபிடிக்கும் விஞ்ஞான நிபுணர்களைப் போல அவர்களும் மண்டையை உடைத்துக்கொண்டார்கள்.

கோபுவும் ரகுவும் பக்கத்துப் பக்கத்து வீட்டுப் பையன்கள். பாலும் நீரும் போன்ற சிநேகிதர்கள். இருவரின் பெற்றோர்களுமே கண்டிப்பானவர்கள். ஆகையால் அவர்களின் அனுமதி

யைப் பெற்று ஸினிமாவுக்குப் போவ தென்பது முடியாத காரியம்.

மத்தியான்ன மணி அடித்தது. கூண்டிலிருந்து விடுபட்ட பறவை களைப்போல, பையன்கள் எல்லாரும் கொம்மாளத்துடன் முகத்தில் எண்ணெய் வழிய, பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேறினர். கடைசியாக ராமுவும் கோபுவும் வந்தார்கள். இருவர் முகமும் சோர்ந்திருந்தது.

"எண்டா ரகு! ஏதாவது 'ஐடியா ஸ்டிரைக்' ஆச்சாடா?" என்று கேட்டான் கோபு.

"நத்திங், உனக்கு?" என்றான் ரகு.

"ஊஹூம்."

"எப்படியும் இந்தப் படத்தைப் பார்த்துத்தான் ஆகணும். அதச்கு ஒரு வழியும் தெரியல்லியே. என்ன செய்கிறது?" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டான் கோபு.

சற்று நேரம் பொறுத்து, "எய் ரகு, நான் சொல்றதைக் கேளு. யோசனை பண்ணி நாம் முடிவு காண்பதற்குள் இந்த ஸினிமா போய்விடும். என்னிடம் ஐந்து ரூபாய் இருக்கிறது. உன்னிடமும் ஐந்து ரூபாய் இருக்கிறது. ஆதலால் நடப்பது நடக்கட்டும். டியூஷன் வாத்தியார் வீட்டுச்குப் போவதாகச் சொல்லிவிட்டு நேராகத் தியேட்டருக்குப் போக வேண்டியதுதான். என்ன தெரிகிறதா? 'கொஞ்சம் முன்னடியே வரச் சொன்னார்' என்று சொல்லிவிட்டு நீயும் கிளம்பிவிடு, என்ன?" என்றான் கோபு தீர்மானமாக.

"ஏ தப்பா, அப்புறம் குட்டு வெளிப்பட்டுவிட்டால்...?" என்று இழுத்தான் ரகு.

"எப்படித் தெரியும்? அப்படியே தெரிந்தாலும் அதுக்கு ஒரு யோசனை அப்புறம் பண்ணிக்கலாம்" என்றான் கோபு.

"என்னமோ, எனக்குப் பயமாயிருக்கிறது!"

"ஹாம், என்னடா பயம்? ஸினிமா பார்க்கணும்கிற ஆசையினாலே ஒரு யோசனையும் தோணமாட்டேங்கிறது. பார்த்த பிறகு 'ஐடியா' தோணும்டா."

"அப்புறம் பயத்திலுலே ஒன்றும் தோன்றாவிட்டால்—?"

"போடா, பயந்தாங்கொள்ளி! நீ வந்தால் வா; இல்லாவிட்டால் போ. நான் நிச்சயம் இன்று சாயந்தரம் போகப் போகிறேன். இந்தச் சின்ன வயசிலே பயந்திண்டே இருந்தால் பெரியவனான பிறகும் உலகத்தில் தன்னம்பிக்கையுடன் நாம் ஒன்றும் செய்யமுடியாது. பிறர் கையைத்தான் எதிர்பார்க்கவேண்டியிருக்கும். உனக்கு வெட்கமாயில்லே? பயம், பயம் என்று சொல்கிறாயே! உங்கப்பா தான் தெரிஞ்சா அடிப்பாரோ? எங்சப்பாவுக்குத் தெரிஞ்சா கொன்னுப்பிடுவார். சரி சரி, கடைசியாகக் கேட்கிறேன். வரப் போகிறாயா, இல்லையா?" என்று ரகுவின் மனத்தை கலைத்தான் கோபு.

"சரிடா" என்றான் ரகு அரை மனசுடன். டியூஷன் வாத்தியார், 'எண்டா நேற்று வரவில்லே?' என்று கேட்டால் என்ன செய்வது? அவன் மனசு என்னவோ பயத்தினுல் நடுங்கிக்கொண்டேயிருந்தது.

வீட்டை நெருங்கியதும், "என்னடா பயந்தாங்கொள்ளி! ஞாபகம் இருக்கிறதா? இன்னும் அரைமணியிலே நான் உன் வீட்டுக்கு வரு

வேன். ரெடியாக இருக்கணும். லேட்டாகப் போனால் டிக்கட் கிடைக்காது. தெரிகிறதா?'' என்றான் கோபு.

"சரி'' என்று போனான் ரகு.

* * *

மாலை ஐந்து மணிக்கெல்லாம் ரகுவும் கோபுவும் தியேட்டர் வாசலை அடைந்தார்கள்.

இருவரும் இரண்டு இரண்டரை ரூபாய் டிக்கட்டுகளை வாங்கிக் கொண்டு ஜம்மென்று திண்டு போட்டுள்ள சோபாக்களில் போய் உட்கார்ந்தார்கள். படம் ஆரம்பித்தது. படம் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை விறுவிறுப்பும், மயிர்க்கூச்செறியும் சம்பவங்களும் நிறைந்திருந்தன. கோபுவும் ரகுவும் தங்களையே மறந்து அந்த ஸினிமாவில் லயித்திருந்தார்கள்.

இரவு மணி ஒன்பது. ஸினிமா முடிந்துவிட்டது. கோபுவும் ரகுவும் வீட்டுக்குக் கிளம்பினர். அவர்கள் எவ்வளவுதான் வேகமாக நடந்தாலும் கால்கள் பின்னோக்கியே இழுத்தன. தைரியமாகப் பேசிய கோபுவுக்கும் இப்போது மனத்தில் பயம் உண்டாகிவிட்டது. ரகுவுக்குச் சொல்லவே வேண்டியதில்லை. ஸினிமா பார்த்த குஷியெல்லாம் மறைந்துவிட்டது. இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு பயத்தால் மௌனமாக நடந்து வந்தனர்.

வீட்டை நெருங்கியதும், "ஏண்டா கோபு? நாளைக்கு என்னடா செய்யப்போறே? டியூஷன் வாத்தியார் கேட்டால் என்னடா சொல்றது? உன் பேச்சைக் கேட்டு வந்தது மகா தப்புடா. ஹூம்...ம்...'' என்றான் ரகு பீதியினால்.

"ஆமாண்டா போடா. எனக்கும்

தான் பயமாயிருக்கிறது. ஒண்ணும் புரியல்லே. என்னமோ நான் ராத்திரி எல்லாம் யோசனை பண்ணிப் பார்க்கிறேன்'' என்றான் கோபு.

தத்தம் வீட்டுக்குப் போய்ப் படுத்துக்கொண்டார்கள். இருவர் மனமும் பயத்தினால் குழம்பியிருந்தது. அவர்கள் இரவு முழுவதும் தூங்கவே இல்லை.

''என்னடா செய்யறது? பயமாயிருக்கிறதே!'' என்று கேட்டுத் தன் பிராணனை வாங்கிவிடுவான் என்ற பயத்தினால் காலையில் சீக்கிரமே பள்ளிக்கூடம் சென்றுவிட்டான் கோபு.

பள்ளிக்கூடத்தில் அன்றும் அந்த ஸினிமாவைப் பற்றியே பேச்சு. ''என்ன ஆச்சரியம்! நேற்றைக்கு நம்ப கணக்குப் புலிகூட காசு கொடுத்து அந்த ஸினிமாவுக்கு வந்திருந்தது. நான் பார்த்தேன்'' என்றான் சங்கர், தன் சகாவிடத்தில். இதைக் கேட்டுக்கொண்டே பள்ளிக்கூடத்தில் நுழைந்த கோபு திகிலுடன், ''நிஜமாகவாடா சங்கர்?'' என்றான்.

''அதாண்டா ஆச்சரியம். கணக்குப் புலியே ஸினிமாப் பார்க்க வந்திருந்ததடா'' என்றான் சங்கர்.

டியூஷன் வாத்தியாருக்குப் பையன்கள் வைத்திருக்கும் பட்டப் பெயர்தான் 'கணக்குப் புலி'.

கோபுவுக்குச் சட்டென்று ஒரு யோசனை உதித்தது. அவன் முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது.

சோர்வுடன் பள்ளிக்கூடம் வந்த ரகுவைப் பார்த்து, ''ஏய், நேற்றைக்குக் கணக்குப் புலியும் ஸினிமாவுக்கு வந்திருந்தாராம். சங்கர் சொன்னான். ஆகையினால் நாம் இரண்டு பேரும் அவருக்காகக் காத்துக்கொண்டு அவர் வீட்டிலே உட்கார்ந்திருந்தோம் என்று ஒரு போடு போட்டுவிடுவோம். என்ன, சரிதானே?'' என்றான் மகிழ்ச்சி பொங்க.

''நல்ல யோசனைடா!...ஒரு சமயம் அவர் நம்மைத் தியேட்டரில் பார்த்திருந்தால்...?'' என்று ஒரு சந்தேகத்தைக் கிளப்பினான் ரகு.

ரகு கிளப்பின சந்தேகம் கோபுவையும் திக்குமுக்காட வைத்தது. டியூஷனுக்குப் போகாமலே இருந்துவிடலாமா என்றுகூட யோசித்தார்கள். அது எப்படியும் முடியாது என்று பட்டது. அப்படியும் இப்படியுமாக மாலை கடந்தது.

இருவரும் டியூஷனுக்குக் கிளம்பினார்கள். வழியில் கோபு, ''ரகு, நம்மைக் கணக்கு வாத்தியார் தியேட்டரில் பார்த்திருந்தால் ஸ்கூலில் கேட்டிருக்க மாட்டாராடா? உதைச்சுப் பிச்சிருப்பாரே!'' என்றான்.

''நல்ல காலம்டா, பிழைச்சோம்'' என்றான் ரகு முகம் மலர.

* * *

''எங்கேடா, நேற்று வந்திருந்தீர்களா?'' என்று வரவேற்றார் வாத்தியார்.

கோபுவுக்குக் குஷி தாங்கவே இல்லை. ரகுவைப் பார்த்துக் கண் சிமிட்டிக்கொண்டே, ''ஆமாம் சார்; நேற்றைக்கு ஆறு மணிக்கே வந்துட்டோம், சார். உங்களுக்காகக் காத்துக்கொண்டு ரொம்ப நேரம் உட்கார்ந்துகொண்டிருந்தோம், சார்'' என்றான் கோபு.

''ஆமாம் சார்! ஒன்பது மணி வரை இருந்தோம், சார். அப்புறம் தான் போனோம்'' என்றான் ரகு.

"உம், அப்புறம்....? எங்கே காத்துக்கொண்டிருந்தீர்கள்?"

"வந்து...என்ன சார்?"

"அட, ஸினிமாக் கொட்டகையில் எங்கே காத்துக்கொண்டிருந்தீர்கள் என்று கேட்கிறேன்!"

"ஸினிமாவா? எனக்குத் தெரியாதே, சார்!" என்றான் கோபு பயந்துகொண்டே.

ரகுவுக்குச் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது.

"இடைவேளையிலே நீங்கள்கூட 'விம்டோ' விற்பவனைக் கைதட்டிக் கூப்பிடவில்லை? பொய் சொல்லாமல் கூறுங்கள், பார்ப்போம்!" என்று கர்ஜித்துக்கொண்டே மேஜை மேல் இருந்த பிரம்பை எடுத்தார்.

ரகுவுக்கு உலகமே பம்பரம்போல் சுழல்வது மாதிரியிருந்தது. கோபுவுக்கு அதளபாதாளத்தில் உருண்டு விழுவதுபோலிருந்தது. முகத்தில் ஈயாடவில்லை.

"இல்லை...சார். தப்பு...சார். இனி...மே பொய் சொல்..ல.. மாட்...டோம்...சார்..." என்று உளறினான் கோபு.

"போக்கிரிகளா! என்னையா ஏமாற்றினீர்கள்? நீட்டு கையை!" என்று பிரம்பைத் தூக்கினார் கணக்குப் புலி.

அப்போது அங்கே வந்த அவர் மனைவி, "போனால் போகிறது. அவர்களை அடிக்காதீர்கள். சிறு பிள்ளைகள்தானே! நான் இவர்கள் வரவில்லை என்று சொல்லியிருக்காவிட்டால் உங்களுக்குத் தெரிந்தே இருக்காது. 'விம்டோ'வைக் கூப்பிட்ட பையன்கள் யாரோ என்று எண்ணியிருப்பீர்கள். நீங்கள் எவ்வளவு அவசர வேலைகளை விட்டுவிட்டு அந்த ஸினிமாவுக்குப் போனீர்கள். நீங்களும் சிறு குழந்தையாகிவிடவில்லையா?" என்று ஓங்கின கையைத் தடுத்தாள்.

இதைக் கேட்ட வாத்தியாரின் கோபம் பனிபோல உருகியது. உயர்ந்த கை தணிந்தது.

ரகுவும் கோபுவும் 'பெத்தோம் பிழைத்தோம்' என்று வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களின் இளம் உள்ளம் வாத்தியார் மனைவியை வாயார வாழ்த்தியது.

அடிமை

ஒரு குதிரை பரந்த புல்வெளியில் வழக்கமாக மேய்ந்துகொண்டு வந்தது. ஒரு நாள் எங்கிருந்தோ ஒரு மான் அந்தப் பிரதேசத்துக்கு வந்துவிட்டது. அந்தப் புல்வெளியில் அதுவும் பங்கு கொண்டது. குதிரை எப்படியாவது மானைப் பழி வாங்க நினைத்தது. அதற்கு ஒரு மனிதனின் உதவியை வேண்டியது. அந்தக் குதிரை அவனைச் சுமந்து செல்லச் சம்மதித்தால் மானை எப்படியாவது விரட்டிவிடுவதாக அந்த மனிதன் சொன்னான். அதற்குக் குதிரை ஒப்புக்கொண்டது. கடிவாளமும் சேணமும் போட்டுக்கொள்ளச் சம்மதித்தது. அவனை முதுகின்மேல் ஏற்றியும் கொண்டது. அவ்வளவுதான்; அந்தச் சமயம் முதற்கொண்டு, மானை விரட்டுவதற்குப் பதிலாக மனிதர்களின் வேலைக்குத் தன்னைத் தானே அடிமையாக்கிக் கொண்டது அந்தக் குதிரை.

உதவிக்கு ஊதியம் கேட்பவனிடம் ஜாக்கிரதையாயிரு.

—ஈசாப் கதை.

ஆசை வேண்டாம்

ஸரோஜா ராமமூர்த்தி

பாலுவைப்போல் ஒவ்வொரு விதத்திலும் இருக்க வேண்டும் என்று கோபுவுக்கு ஆசை. அவன் வசிக்கும் வீட்டில் இருந்து பள்ளிக்கூடம் கிட்டத்தட்ட இரண்டு மைல்கள் இருக்கும். காலையில் ஒன்பது மணிக்குள் பழையது சாப்பிட்டுவிட்டு இடைவேளைச் சாப்பாட்டுக்காகக் கொஞ்சம் தயிர்ச்சாதம் கட்டி எடுத்துக்கொண்டு, பள்ளிக்கூடம் போவான் கோபு. மாலை நாலரை மணிக்குப் பள்ளிக்கூடம் விட்டார்சளானால் ஆறு மணிக்குத்தான் வீட்டை அடைய முடியும். அதற்குமேல் விளையாடப் போகவும், தமாஷாக நண்பர்களைச் சந்தித்துப் பேசவும் அவகாசம் ஏது?

ஆறரை மணிக்கெல்லாம் விளக்கேற்றியதும் பாடங்களைப் படிக்க வேண்டும் என்பது அவனுடைய தசப்பனாரின் கட்டளை.

பாலு, காரில் பத்தடிக்கப் பத்து நிமிஷங்களுக்கு முன்புதான் வீட்டை விட்டுக் கிளம்புவான். கோபு பள்ளிக்கூட ரஸ்தாவை அடைவதற்கு முந்தியே கார் சிட்டாகப் பறந்து அவனைத் தாண்டிப் போய்விடும். பாலு, கோபுவைவிட அழகில்லை. படிப்பிலும் சாதாரணம்தான். ஒரு நாளாவது வீட்டுக் கணக்கைச் சரிவரப் போடுவதில்லை. பள்ளிக்கூடத்திலேயே கோபுவுக்கு இருந்த நல்ல பெயரும் மதிப்பும் பாலுவுக்கு இல்லை. ஆனால், இதெல்லாம் கோபுவின் மனத்தில் எந்தவிதமான திருப்தியையும் ஏற்படுத்தவில்லை. பாலு தினுசு தினுசாக அணிந்து வரும் உடைகளும், அவனுடைய டாம்பிகமான பேச்சுக்களையும் கேட்டுத் தானும் அதைப்போல் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான் கோபு.

இடைவேளை மணி அடித்ததும் கோபு அசிரத்தையுடன் கையில் கொண்டு வந்திருந்த சாப்பாட்டை எடுத்துக்கொண்டு மரத்தடிக்குப் போனான். தினம் தினம் ஆறிப் போன தயிருஞ் சாதமும், ஊறுகாயும்தான்! பாலு, எதிர்த்தாற்போல் இருக்கும் மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு வெண்ணெய் தடவிய ரொட்டியையும், சுடச்சுட

'பிளாஸ்'கில் ஆவி பறக்கும் பாலை யும் சுவைத்துச் சாப்பிட்டுக்கொண் டிருந்தான். ரொட்டி சாப்பிட்டு முடிந்ததும், வெறுமனே தின் பதற்குப் பிஸ்கோத்தும் பழங்களும் வேறு வீட்டிலிருந்து வந்திருந்தன.

"சீ! தினம் தினம் இதைத் தவிர அம்மாவுக்கு வேறு ஒன்றுமே கிடைப்பதில்லை. இதை அப்படியே கொண்டுபோகிறேன் வீட்டுக்கு! அம் மாவே சாப்பிடட்டும் இதை!" என்று கோபு பாத்திரத்தின் மூடி யைப் 'பட்'டென்று மூடினான்.

"கோபு! கோபு!" என்று பாலு அவசரமாகக் கூப்பிட்டான்.

கோபு திரும்பிப் பார்த்ததும், "அடே! கொஞ்சம் பாலும் ரொட் டியும் மீதி இருக்கிறது. வீணுகப் போய்விடும். நீ சாப்பிட்டுவிடேன்!" என்றான் பாலு. மீதி இருப்பதை இவன் சாப்பிடவேண்டுமாம். பாலு கர்வமாகச் சொன்ன வார்த்தையா அது?

"என்னடா அது? என்னவோ யோசனை பண்ணுகிறாய்? ரொட்டி யும் பாலும் கசக்கிறதோ உனக்கு?" என்றான் பாலு.

"மீதி இருப்பதைச் சாப்பிட நான்தானா அகப்பட்டேன், உனக்கு?" என்று கத்திவிட்டு ஒரே வாயில் தான் கொண்டு வந் திருந்த சாதத்தைத் தின்றுவிட்டு கோபு வகுப்புக்கு ஓடினான்.

* * *

இருந்தாலும் கோபுவுக்குப் பாலு வின் டாபபிக வாழ்வு ரொம்பவும் பிடித்திருந்தது. வழக்கம்போல் அவன் அம்மா அவனுக்காகத் தயிர்ச் சாதம் பிசைந்துகொண் டிருந்தாள்.

"இன்றைக்கு என்ன அம்மா கொடுக்கப் போகிறாய் எனக்கு?" என்று ஆவலுடன் தாயைக் கேட் டான் கோபு. அவள் ஆச்சரியத் துடன் திரும்பிப் பார்த்தாள்.

"வேறு என்ன அப்பா இருக் கிறது? சாதம்தான் கொடுக்க முடி யும். சாயங்காலம் பள்ளிக்கூடத்தி லிருந்து வருவதற்கு முந்தி கொஞ்சம் முறுக்குச் செய்து வைக்கிறேன்."

"முறுக்கா?"

"ஆமாம். பின்னே என்ன வேண்டும் உனக்கு?"

"கோடி வீட்டுப் பையன் பாலு தினமும் பாலும் ரொட்டியும் பழமும் சாப்பிடுகிறான், அம்மா!"

தாயின் கண்களில் நீர் நிறைந் தது. "அவர்கள் பணக்காரர்கள் அப்பா. நமக்கு இந்தத் தயிர்ச் சாதம் போதும். ஒரு நாளைக்கு வேண்டுமானால் உன் அப்பாவை ரொட்டியும் பாலும் வாங்கித் தரச் சொல்கிறேன்" என்று குழந்தை யின் மனத்தை முறிக்காமல் பேசி னாள் தாய். கோபு விடுவிடென்று

சாலை ஓரமாகப் போக ஆரம்பித்தான்.

சாலை திரும்பும்போது பாலுவின் கார், 'விர்'ரென்று பறந்தது. அதற்குள் அழகிய நீல நிஜாரும், வெள்ளைப் பட்டுச் சட்டையும் அணிந்து, தலையில் அழகிய தொப்பியுடன் சாய்ந்து உட்கார்ந்துகொண்டிருந்தான் பாலு. அவன் ஜேபியில் பளபளவென்று பேனா ஒன்று செருகியிருந்தது. கோபுவின் கைகள் அவனை அறியாமல் அவனுடைய உடைந்த கட்டைப் பேனாவைத் தடவிப் பார்த்துக்கொண்டன.

நடந்த களைப்பில் நெற்றியில் அரும்பியிருந்த வேர்வையைத் துடைத்துக்கொண்டு வகுப்புக்குள் நுழைந்தான் கோபு. அங்கே பாலு அலுங்காமல், நலுங்காமல் பெஞ்சியில் ஜம்மென்று உட்கார்ந்திருந்தான். உபாத்தியாயர் வீட்டுக் கணக்குகளைப் பார்வையிட்டார். பாலு போட்டிருந்த கணக்குகள் எல்லாம் தவறு. கோபுவின் கணக்குகள் வாத்தியார் சொல்லிக் கொடுத்தபடி எள்ளளவும் பிசகாமல் ஒழுங்காக இருந்தன.

"பாலு! நீ ஒழுங்காக வருகிறாயே தவிர, பாடங்களில் ஒழுங்கு இல்லையே?" என்று உபாத்தியாயர் கோபித்துக்கொண்டார். கோபுவை விட்டுப் பாலுவுக்குக் கணக்குச் சொல்லித் தரும்படியும் கூறினார்.

"போடா! நீ சொல்லி நான் படிக்கவேணுமா?" என்று சொல்லிவிட்டான் பாலு.

உபாத்தியாயரும் பேசாமல் இருந்துவிட்டார். தான் கெட்டிக்காரன் என்று உபாத்தியாயரால் புகழப்படுவது கோபுவுக்குக் கொஞ்சம் திருப்தியாக இருந்தது. அவன் தகப்பனாரும் அதைத்தான் கூறுவார்.

"கெட்டிக்காரனாகப் படித்தாயானால் பிற்காலத்தில் புகழோடு இருப்பாய்" என்பார்.

'ஆமாம், பிற்காலத்தைக் கண்டவர்கள் யார்? இன்று வெயிலில் நடந்து வருவது கால் கடுக்கிறது. பாலு எவ்வளவு குஷியாக இருக்கிறான்?' என்று கூடவே அதிருப்தியையும் அடைந்தான்.

* * *

பாலு ஒரு வாரமாகப் பள்ளிக்கூடம் வரவில்லை. உடம்பு சரியில்லை என்று தகவல் வந்தது. 'பாவம்! என்ன உடம்போ?' என்று நினைத்துக்கொண்டான் கோபு.

"உடம்புக்கு என்னடா? அலுங்காமல் காரில் சவாரி செய்தால் உடம்புக்கு வராமல் என்ன பண்ணுமாம்? ஒரு நாளாவது தேகாப்பியாச வகுப்புக்கு அவன் வந்திருக்கிறானா?" என்று அவன் பேரில் குற்றம் சாட்டினார் தேகாப்பியாச உபாத்தியாயர்.

கோபு ஐந்தாறு தினங்கள் வரையில் பாலுவைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. ஒரு தினம் மாலை பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குப் போகும்போது பாலுவின் வீட்டருகில் நின்று கேட்டின் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தான். பாலு, வராந்தாவில் ஒரு சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டிருந்தான். அவன் காலில் ஏதோ மருந்து தடவி, கட்டுப் போட்டிருந்தது. வலது கையிலும் முழங்கை வரையில் கட்டு.

இவன் கேட்டருகில் நிற்பதைக் கவனித்த பாலு அவனை உள்ளே வரும்படி அழைத்தான்.

"உட்கார்ந்துகொள், கோபு"

என்று அன்புடன் தன் எதிரில் இருக்கும் நாற்காலியைக் காட்டினான் பாலு.

"பாலு! உன் காலில் என்ன?" என்றான் கோபு இரக்கத்துடன்.

"அதுவா, கோபு? எனக்கு இளம்பிள்ளை வாதம் வந்து இருக்கிறதாம். நடக்கவும் முடியவில்லை. கையை நீட்டவும் முடியவில்லை! உன்னைப் போல் கால்களையும், கைகளையும் வீசி நடக்கப் போகிறேனா, என்று ஆசைப்படுகிறேன், கோபு" என்று பாலு விசித்து விசித்து அழுதான்.

'கார் இருந்து என்ன பிரயோஜனம்? சதா காரிலேயே உட்கார்ந்து இருக்க முடியுமா என்ன?' என்று நினைத்துக்கொண்டான் கோபு.

"டாக்டர் பத்தியமாகச் சாப்பிட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். ரொட்டியும் பாலும் அலுத்து விட்டது. உன்னைப்போலக் கட்டுச் சாதம் கட்டி எடுத்து வந்து 'ஜில்' லென்று சாப்பிடவேண்டும் போல் இருக்கிறது, கோபு."

'ஆகா! நான் எவ்வளவு முட்டாளாக இருந்தேன்?' என்று நினைத்துப் பார்த்தான் கோபு.

கைகளையும் கால்களையும் வீசி நடப்பது எவ்வளவு ஆனந்தம்? அதைப் பாலுவால் இப்பொழுது உணர முடிந்தது. தாய், அன்புடன் அளிக்கும் அமுதத்தை—அது அமுதம்தான்—சாப்பிடுவது எவ்வளவு ஆனந்தம்! ஆரோக்கியத்துடன் இருப்பது இவை எல்லாவற்றையும்விட எவ்வளவு ஆனந்தம்! பாலுவுக்குக் கார் இருக்கிறது. விதவிதமான உடைகள் இருக்கின்றன. ஆனால் ஆரோக்கியம் கெட்டுவிட்டதே!

"கோபு! தினம் வந்து என்னுடன் பேசிவிட்டுப் போகிறாயா?" என்று உருக்கமாகக் கேட்டான் பாலு கோபுவிடம்.

"வருகிறேன் பாலு! நீ வருத்தப்படாதே. கடவுள் உனக்கு ஆரோக்கியத்தைக் கொடுப்பார்" என்று பெரியவர்கள் போல் பேசிவிட்டுக் கோபு வீட்டை அடைந்தான்.

அன்று அம்மா அவனுக்கு அளித்த சீடையையும் முறுக்கையும் ஜேபியில் போட்டுக்கொண்டு பலமாகக் கைகளையும் கால்களையும் ஆட்டிக்கொண்டு வெளியே சென்றான் கோபு.

லோபியும் தங்கமும்

'சோமசன்மா'

உங்களுக்கு லோபி என்ருல் தெரியுமா? அவன்தான்; கருமி என்று சொல்வார்களே, அவன்! அவனுக்கு நிறையப் பணம் இருக்கும். ஆனல் காலணுகூடச் செலவு செய்யமாட்டான். வயிற்றைப் பசித்தால் வயிற்றில் ஈரத்துணியைப் போட்டுக் கட்டிக்கொண்டு கிடப்பானே ஒழிய, ஓரணு கொடுத்து இரண்டு வாழைப் பழங்கூட வாங்கித் தின்னமாட்டான். யாராவது வந்து கேட்டாலாவது ஏதாவது கொடுப்பான் என்று நினைக்கிறீர்களா? அதுவும் இல்லை. பிச்சைக்காரனுக்கு ஒரு மணி அரிசிகூடப் போடமாட்டான்.

அவ்வளவு பணத்தையும் என்னதான் செய்வான் என்று கேட்கிறீர்களா? அதுதான் வேடிக்கை. அவ்வளவு பணத்தையும் பவுனுகவும் வெள்ளியாகவும் மாற்றி, பூமிக்குள் ரகசியமாகக் குழி தோண்டிப் புதைத்து வைத்திருப்பான்.

அப்படித்தான் ஓர் ஊரில் ரொம்ப நாளைக்கு முந்தி ஒரு லோபி இருந்தான். அவனுக்குப் பெயர் கருமிக் கந்தசாமி. அவன் பெரிய கருமி. எச்சில் கையால் காக்கையை ஓட்டமாட்டான். அப்படி ஓட்டினுல் கையில் ஒட்டிக்கொண் டிருக்கும் சோற்றுப் பருக்கை கீழே விழுந்துவிடுமாம். அதைக் காக்கை பொறுக்கிக் கொண்டு போய்விடுமாம்! அது மாத்திரம் இல்லை; அந்தக் காக்கை வாயில் முறுக்கு, சீடை வைத்துக்கொண் டிருந்தால் அதைத் தட்டிப் பிடுங்கிக்கொண்டு போய்விடுவான். அவ்வளவு கருமி!

அந்தக் கருமிக் கந்தசாமி என்ன பண்ணினுன், தன்னிடம் உள்ள பணத்தையெல்லாம் தங்கக் கட்டிகளாக மாற்றினுன். அவைகளையெல்லாம் ஒரு துணியைப்போட்டுக் கட்டி ஒரு பானைக்குள் போட்டு, அதன்மேல் ஒரு துணியைச் சுற்றி, வாயில் சேற்றைப் பூசி, பானையைக் கொண்டுபோய் ஊருக்கு வெளியில் ஒரு புளியமரத்தடியில் குழிதோண்டிப் புதைத்து வைத்திருந்தான். அந்த இடத்தைச் சுற்றி நிறையச் சப்பாத்திக் கள்ளியை வைத்திருந்தான். ஏனென்ருல் யாரும் அங்கே போகமுடியாது அல்லவா? அதற்காகத்தான்! அந்தப் புளிய மரம் எங்கேயிருந்தது என்று நினைக்கிறீர்கள்? ஆற்றங்கரையில்

மனிதர்களே போக முடியாத ஒரு மேடு; அதில் யார் கண்ணிலும் படாதபடி இருந்தது.

இவ்வளவு தூரத்தில் கொண்டுபோய் வைத்துவிட்டான் அல்லவா? இருந்தாலும் அவனுக்கு உள்ளூறப் பயம்தான். யாராவது அங்கே போய் எடுத்துவிட்டால் என்ன பண்ணுவது என்று அதற்காகத் தினம் காலையில் எழுந்ததும் பலகூடத் தேய்க்காமல் நேராகப் புளியமரத்தடிக்குப் போவான். அங்கே சப்பாத்திக்கு மறைவில் ஒரு கடப்பாரையை ஒளித்து வைத்திருந்தான். அதை எடுத்துக் குழியைத் தோண்டி, பானையை எடுத்துத் தங்கக் கட்டிகள் வைத்தபடியே இருக்கின்றனவா என்று பார்த்துவிட்டு, மறுபடியும் பழையபடியே பானையைக் குழியில் வைத்து மூடிவிட்டு வந்துவிடுவான்.

இப்படித் தினம் போகும்போது யாராவது எதிரில் வந்து, "எங்கே போகிறாய் கந்தசாமி?" என்று கேட்டுவிட்டால் என்ன பதில் சொல்வான் தெரியுமா? "எனக்கு ஒரு வயிற்றுவலி, ஸார். அதற்காக டாக்டர் தினம் ஒரு மைல் நடந்துவிட்டு வரவேண்டும் என்று சொல்லுகிறார். அதனால்தான் போகிறேன்" என்றுதான் சொல்வான்.

இப்படி இருக்கையில் அந்த ஊரில் சம்பந்தம், சம்பந்தம் என்று ஒருவன் இருந்தான். வழியில்போகிறவர்களையெல்லாம் வலுச்சண்டைக்கு இழுப்பான். அவனைக் கண்டால் எல்லாருக்கும் பயம். அந்தச் சம்பந்தம் என்ன செய்தான், நம்முடைய கருமிக் கந்தசாமி எங்கே போகிறான் என்று பார்க்க

வேண்டும் என்று தீர்மானித்தான். அதற்காக அவன் விடியற்காலம் போகும்போது அவன் கூடவே மறைந்து மறைந்து போனான்.

புளியமரத்தடியை அடைந்ததும் சம்பந்தம் சப்பாத்திக் கள்ளிக்கு மறைவில் ஒளிந்துகொண்டான். கந்தசாமி குழியைத்தோண்டி, பானையை எடுத்துத் தங்கத்தைப் பார்த்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டு மறுபடியும் புதைத்து வைத்துவிட்டுத் திரும்பிவிட்டான்.

அதையெல்லாம் பார்த்துக்கொண்டேயிருந்த சம்பந்தம் அன்று ராத்திரியே ஒருவருக்கும் தெரியாமல் புளிய மரத்தடிக்குப் போனான். குழியைத் தோண்டித் தங்கத்தையெல்லாம் மூட்டையாகக் கட்டிக்கொண்டான். பானையைப் பழையபடியே வைத்துப் புதைத்துவிட்டு வந்துவிட்டான்.

மறுநாள் பொழுது விடிந்தது. கந்தசாமி வழக்கம்போல் புளிய மரத்தடிக்குப் போய்ப் பானையைத் தோண்டிப் பார்த்தால், அதில் ஒன்றும் இல்லை! காலியாக இருந்தது. உடனே அவன் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு, "ஐயோ போச்சே! தங்கம் எல்லாம் போச்சே!" என்று அலறினான்.

அப்போது அவன் அழுவதைக் கண்ட அந்தப் புளிய மரம் கடகடவென்று சிரித்துவிட்டுச் சொல்லும்: "அடே! கந்தசாமி! ஏன் அப்படி அழுகிறாய்? என்ன குடி முழுகிப் போய்விட்டது! எப்போதும் போல் வந்து இந்தப் பானையை பார்த்துச் சந்தோஷப்படேன். அதில் உள்ள தங்கத்தையோ ஒரு கடுகுகூட நீ செலவழிப்பதில்லை. அதில் தங்கம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உனக்கு ஒன்றுதானே?"

ஆகையினால் பிள்ளைகளே! லோபியாய் உள்ளவர்களிடம் பணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றுதான் என்பது இதனால் தெரிகிறது அல்லவா?

பொருமைத் தீ

'நீலம்'

நாதமங்கலம் மிட்டாதார் தம் பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்திருந்தார். மிட்டா தார் வீட்டுக் கல்யாணம் என்றால் கேட்கவா வேண்டும்? வாண வேடிக்கைகள் என்ன, பாட்டு, நாட்டியக் கச்சேரிகள் என்ன - எல்லா வற்றிற்கும் ஏற்பாடு செய்திருந் தார். எங்கும் இதே பேச்சாக இருந்தது. மிட்டாதாரின் பெண் வீணை வாசிக்கக் கற்றுக் கொண்ட வள். ஆகவே கல்யாண தினத் தன்று மாலை ஒரு பிரபல வீணை வித்வானை வரவழைத்து, சுபமாக முதல் கச்சேரி வைக்க எண்ணினார் மிட்டாதார்.

வீணை வாசிப்பதில் நிபுணன் என்ற பெயர் பெற்றவர் சுகவனம். இதேமாதிரி இவருடைய வாசிப்புக்கு அநுசரணையாகப் பக்க வாத்தியம் வாசிப்பதில் புகழ் அடைந்தவர் கடம் கந்தப்ப வாத்தியார். சுகவனத்துக்குத் தாள ரகசியங்கள் அவ்வளவாகத் தெரியாது. ஆனால் கடம் கந்தப்ப வாத்தியார், கெட்டிக் காரர். அந்தக் குறையைத் தம் வாசிப்பின் சிறப்பினால் மூடிக் கொண்டுபோய் விடுவார். நாளாவட்டத்தில், தம்மால்தான் சுகவனம் புகழடைவதாகக் கடம் கந்தப்ப வாத்தியார் நினைக்க ஆரம்பித்தார். இதன் காரணமாக இரண்டு பேருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டுவிட்டது. கச்சேரிகளில் கிடைக்கும் பணத்தில் தமக்கே அதிகப் பங்கு உரியது என்று கந்தப்ப வாத்தியார் உரிமை கொண்டாடினார்.

தம்மால்தான் பக்கவாத்தியத்துக்கு 'மவுஸ்' ஏற்பட்டிருக்கிறதென்றும் ஆகவே தமக்குரிய பங்குதான் அதிகமாயிருக்க வேண்டுமென்றும் வாதாடினார் சுகவனம்.

இந்தச் சச்சரவினால் இருவருக்கும் கச்சேரி செய்வதற்கான சந்

தர்ப்பங்கள் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்தன.

மிட்டாதாருக்கு இவர்களுடைய பொருமைப் போட்டியைப்பற்றி ஒன்றும் தெரியாது. எனவே அவர் இரண்டு பேரையும் பார்த்துப் பேசி, தம் பெண் கல்யாணத்துக்குக் கச்சேரி செய்ய அச்சாரம் கொடுக்க நினைத்தார்.

முதலில் அவர் சுகவனத்தை வரவழைத்தார். மிட்டாதாரைப் பார்த்தவுடன் "நம்ம வீட்டிலே கல்யாணமாமே? நானே இங்கே வந்து, உங்களைப் பார்த்து என் கச்சேரி வைக்க ஏற்பாடு செய்யக் கேட்க வேண்டுமென்றிருந்தேன்!" என்று சுகவனம் மிட்டாதாரை முந்திக்கொண்டு பேசினார்.

"ஆமாம். முதல் கச்சேரி நீங்கள் தான் செய்யவேண்டும். நம்ம பெண்ணுக்கு வீணையிலே ரொம்ப ஆசை. அதுதான் இதை முதலில் வைக்க எண்ணம்."

"பேஷ், பேஷ்! ஆமாம்; பக்க வாத்தியத்துக்கு—?" என்று இழுத்தார் சுகவனம்.

"நம்ம கடம் கந்தப்ப வாத்தியாரை ஏற்பாடு செய்யலாம் என்று இருக்கிறேன்" என்றார் மிட்டாதார்.

"ரொம்ப சந்தோஷம்! ஆனல் பக்கவாத்தியத்துக்கு வேறு யாரை யாவது....," என்று மென்று விழுங்கினர் சுகவனம்.

மிட்டாதார்: என்? உங்க வாத்தியத்துக்கு அவரைப் போட்டால் தான் சோபிக்கும் என்று எல்லாரும் சொல்கிறார்களே!

சுகவனம்: "உண்மை தான். இப்போதெல்லாம் அப்படியில்லே. பானை வாத்தியம் பாருங்கோ! அதையெல்லாம் கல்யாணக் கச்சேரிகளிலே வைக்கிறது அவ்வளவு சரியில்லே.

மிட்டாதார்: விஷயத்தைத் தெளிவாகச் சொல்லுமே!

"ஒண்ணுமில்லே. நான் உங்கள் கல்யாண விஷயமாகச் சொல்லப்படாது. கொஞ்ச காலத்துக்கு முன்னாலே இரண்டொரு கல்யாண வீடுகளிலே இவர் பக்க வாத்தியம் வாசித்தார். தம் திறமையைக் காட்ட அவர் பானையை உயரே தூக்கித் தூக்கி எறிந்து வாசித்தார். பானை பிடி தவறிக் கீழே விழுந்து நொறுங்கி விட்டது. கல்யாண வீட்டில் இந்த மாதிரி பானை விழுந்து நொறுங்குவது கொடிய அபசகுனமாயிற்றே என்று எல்லாருக்கும் தாங்க முடியாத வருத்தம். அதனால்தான் நம்ம வீட்டில் நடக்கும் கல்யாணத்தில் அதுக்கெல்லாம்...." என்று இழுத்தாற்போல் ஏளனப் புன்னகை செய்தார் சுகவனம்.

மிட்டாதாருக்கு இதைக் கேட்டதும் 'சுருக்'கென்று தைத்தது. அந்த விநாடியே கந்தப்ப வாத்தியாரின் பக்க வாத்திய நினைப்பை அவர் கைவிட்டார். சுகவனத்துக்கோ தம் யுக்தியை எண்ணி ஒரே பூரிப்பு.

இந்தச் செய்தி எப்படியோ கந்தப்ப வாத்தியார் காதுக்கும் எட்டியது. அவருக்குக் கோபம் தாங்க முடியவில்லே. மிட்டாதார் வீட்டுக்கு விழுந்தடித்துக்கொண்டு ஓடினர்.

மிட்டாதார், "என்னங்காணும்? எங்கே இப்படி வந்தீர்? நம்ம வீட்டுக்கல்யாணத்துக்குச் சுகவனத்தின் வீணைக் கச்சேரி ஏற்பாடு பண்ணி, பக்க வாத்தியத்துக்குச் சோமுவை மிருதங்கம் வாசிக்கச் சொல்லி

யிருக்கிறேன்'' என்று கடம் வாசிக்க ஏற்பாடு செய்யவில்லை என்பதைச் சூசகமாகச் சொன்னார்.

கந்தப்ப வாத்தியார்: பேஷாகச் செய்யுங்க! மிருதங்கத்துக்குத்தான் சோமுவைப் போட்டாச்சு. பிடில்காரர் ஒருவரையும் போட்டு வாய்ப்பாட்டுக் கச்சேரியையே நடத்திப் பிடலாமே!

மிட்டாதார்: நம்ம குழந்தைக்கு அந்த வாத்தியத்திலே ஏதோ ஒரு தனிக் கவர்ச்சி.

கந்தப்ப வாத்தியார்: அது சரி; உங்களிஷ்டம். ஆனல் அவரை வீணை வாசிக்கச் சொல்லணுமா என்றுதான் யோசிக்கிறேன். சபைக் கச்சேரியாணுலும் ஒழியட்டும் என்று சொல்லலாம். அவருக்குப் புஷ்பம், சந்தனம், இந்த வாசனைகள் அதிகமுள்ள இடங்களில் வீணை வாசிக்க நேர்ந்தால் ஏதோ ஒரு கடுமையான வலிப்பு வந்துவிடும். கச்சேரி மேடையில் வாசித்துக் கொண்டிருக்கும்போதே வாயில் நுரை நுரையாகத் தள்ளி, மல்லாந்து விழுந்துவிடுவாரே. கல்யாண வீட்டிலே இந்த மாதிரி நடப்பது மங்களகரமாக இராது. அதுவும் இதைப்போல் எல்லாம் நம்ம குழந்தை கல்யாண தினத்தன்று நடக்க இடம் கொடுப்பானேன்? முன்னதாகவே இதை உங்களிடம் சொல்லணும் என்றுதான் ஓடோடி வந்தேன். அப்புறம் உங்கள் விருப்பம்.

இரண்டாம் தடவையாக மற்றோர் அபசகுனமான தகவல் கல்யாணச் சந்தர்ப்பத்தில் காதில் விழவே மிட்டாதார் மனம் உடைந்து போனர்.

அச்சாரம் போனல் போகட்டும் என்று உடனே சுகவனத்துக்கு ஓர் ஆளை அனுப்பி, வீணைக் கச்சேரி ரத்தாகி விட்டதாகச் செய்தியனுப்பினர் மிட்டாதார்.

கச்சேரி திடீரென்று ரத்தான காரணத்தைத் தெரிந்துகொள்ள சுகவனத்துக்கு அதிக நாழியாக வில்லை. தம் பொறாமைத் தீயே தம்மைத் திரும்பச் சுட்டுவிட்டதை அவர் உணர்ந்தார்.

மிட்டாதார் வீட்டுக் கல்யாணம் வீணைக் கச்சேரியின்றியே அமோகமாக நடைபெற்றது.

நீ எழுத வேண்டுமா?

'தம்பி'

குழந்தைகளிலே சிலர் தம் பாட புத்தகங்களைத் தவிர, பொது அறிவுப் புத்தகங்களைப் படிக்கிறார்கள். தமக்கும் எழுதும் திறமை இருக்கிறதா என்று எழுதுகிறார்கள் அதுவும் பத்திரிகைகளுக்கு எழுதவேண்டும்என்ற ஆசை யாருக்குத்தான் இல்லை?

ஆனால் 'பிடி பேனாவை; ஓட்டு; அனுப்பு ஒரு பத்திரிகைக்கு! –' என்றே இப்பொழுது பழக்கமாக இருக்கிறது. இது கூடாது. நன்கு சிந்தித்துத் தெளிவாக ஒரு முடிவுக்கு வந்தபிறகே அதைக் காகிதத்தில் எழுத வேண்டும்.

முதலில் எத்தனை பேர் தெளிவாக எழுதுகிறார்கள்? கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம் என்று கூறும்படி இருக்கவேண்டிய அவசியமில்லை. அந்த எழுத்தைப் பத்திரிகாசிரியர் படித்து ஓர் அபிப்பிராயம் கொள்ள வேண்டும். ஆசிரியர் தம் சக்தியை யெல்லாம், 'இது என்ன பாஷை?' என்று துருவிக் கண்டு பிடிக்கும் முயற்சியிலேயே செலவழித்தால், விஷயத்தைப் புரிந்துகொள்வது எப்படி! நல்ல கையெழுத்துக்கு எப்பொழுதும் நல்ல மதிப்பு உண்டு.

எதையும் நல்ல காகிதத்திலேயே எழுத வேண்டும். முழு நீளக் காகிதம் அவசியமே இல்லை. அது எழுதுவோருக்கும் கஷ்டம்; அச்சுக் கோப்பவருக்கும் தொல்லை. அதில் சரிபாதி அளவுள்ள காகிதத்தில் எழுதுவது நல்லது. காகிதத்தில் ஒரே பக்கத்தில் எழுதவேண்டும். மேலும் கீழும், இடது புறமும் வலதுபுறமும் போதுமான இடம் விட்டும் வரிக்கு வரி இடைவெளி விட்டும் வார்த்தைக்கு வார்த்தை இடம் விட்டும் தெளிவாக எழுதவேண்டும். சங்கிலி போன்ற எழுத்துக்களும் வால்களும் துதிக்கைகளும் எளிதாகப் படிக்க உதவா.

முதல் பக்கத்தில், எழுதுபவர் தம் பெயர், விலாசம் முதலியவைகளைக் குறிக்கவேண்டும். விஷயத்தின் தலைப்பையும் மேலே எழுத வேண்டும்.

'உணர்ச்சி உந்திற்று; எழுதினேன்' என்று கிறுக்கித் தள்ளி, ஆசிரியரிடம் வீசலாகாது. எழுதி முடித்தவுடன் எழுதியதை ஊன்றிப் படிக்கவேண்டும். விஷய அமைப்பு, வார்த்தைக் கட்டு, சந்தி போன்ற இலக்கணச் சின்னங்கள் - முதலியவைகளைக் கவனித்து, தேவையான திருத்தங்களையும் செய்யவேண்டும். பிறகே தெளிவாக நகல் எடுத்து ஒரு பத்திரிகைக்கு அனுப்பலாம். கட்டுரையின் ஒரு பிரதியைக் கையிலே வைத்திருப்பது எப்போதும் நல்லது.

சுருங்கச் சொல்வதில்தான் பெருமை. ஆனால் விளங்கவும் வைக்கவேண்டும். அநுபவமுள்ள எழுத்தாளர் ஒருவர் கூறியபடி, நீ எழுத நினைப்பதையெல்லாம் எழு

திக் கொட்டிவிடு. பிறகு வார்த்தைகளை எண்ணிப் பார். வார்த்தைக்கு இரண்டு ரூபாய் செலவழித்து, கேபிள் கொடுக்கவேண்டும் என்று நினைத்துக்கொள். சிக்கனமாயும், அதே சமயத்தில் தெளிவாயும் உன் கேபிளை அனுப்ப என்ன செய்வாயோ அதைச் செய். அநாவசியமான வார்த்தைகளை எல்லாம் கழற்றி எறிந்துவிட்டு உன் கட்டுரையைக் கவனி. அது ரத்தினம்போல் விளங்கும்

படிப்பவர் பொறுமையைச் சோதிப்பவை நீளமான பாராக்கள். கூடியவரை அப்படி எழுதாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். கட்டுரையின் அமைப்புக்கு ஏற்றபடி, சிறு சிறு பாராக்களாக அதைப் பிரித்து எழுதவேண்டும்.

நீளமான பாராவை விடக் கெடுதலானது நீளமான வாக்கியம். படிப்பவர்கள் விறுவிறுப்பாய், விஷயத்தில் 'லயித்துப் படிக்கவேண்டுமானால் நீளமான வாக்கியங்கள் எழுதாதே!

பிறகு, 'பங்க்சுவேஷன்' என்னும் இலக்கணக் குறிமுறையையும் கவனி. இந்தக் குறிகள் வார்த்தைகளின் தெளிவுக்காகவே ஏற்பட்டவை. எழுதுபவருடைய உள்ளம் பேசுவதை, இந்தக் குறிகளைக்கொண்டு அநேகமாகக் காட்ட முடியும்.

பள்ளிக்கூடத்தில் ஆங்கில வகுப்பிலே யாராவது ஒரு சொல்லைத் தவறாக எழுத்துக் கூட்டினால் அந்த 'ஸ்பெல்லிங்'கைச் சொல்லிச் சொல்லி உபாத்தியாயர் எப்படிக் கேலி செய்வார்! நினைவிருக்கிறதா? ஆங்கிலச் சொலலைத் தவறாக எழுதுவது அவ்வளவு அவமானமான காரியம் அதேபோலத் தமிழிலும் எழுதுபவர்கள் பிழையின்றி எழுதவேண்டும்.

எழுதியாகிவிட்டது. இனி அதை ஒரு பத்திரிகைக்கு அனுப்ப வேண்டும். இதைச் சற்று யோசித்துச் செய்யவேண்டும். நீ எந்தப் பத்திரிகைக்கு அனுப்ப நினைக்கிறாயோ அதை நன்கு படித்துப் பார். எது மாதிரி விஷயங்களை அதில் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள். உன் கட்டுரை அந்தப் பத்திரிகைக்கு ஏற்றதா என்று பார். அதன் பிறகு அனுப்பு. அழகிய சிறு கதை ஒன்றை எதற்காவது அனுப்பிவிட்டு, 'கதை திரும்பி விட்டதே' என்று பிறகு வருந்தலாமா? கட்டுரையை அனுப்பும்போது, அது உன்னிடம் திரும்புவதற்கும் வழிச் செலவு கொடுத்தனுப்பு! — அதாவது போதிய தபால்தலையை உடன் வைத்து அனுப்பு.

உன் கட்டுரை வெளியான பிறகு ஆயிரக்கணக்கானவர்கள் பாராட்டினாலும் அது பெரிதில்லை. உன் கட்டுரை எழுத்துப் பிரதியாக இருக்கும்போதே அதைப் பாராட்டக்கூடிய ஒரு மனிதர் தான் உனக்குத் தேவை. அவர் தான் ஆசிரியர். இளம் எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் இடையே இவர் நிற்கிறார். கலையும் இலக்கியமும் வளர வேண்டும் என்றால் ஆசிரியர்களைத் தொல்லைப்படுத்தலாகாது. கண்ட விஷயத்தையும் பிறர் எழுதியதையும் கண்மூடித்தனமாக அவர்களிடம் அனுப்பக்கூடாது.

கூடியவரை ஆசிரியருடைய கஷ்டங்களைக் குறைக்கவேண்டும் ஒவ்வொரு கட்டுரையோடும் அதை விவரித்து நீளமான கடிதம் எழுதினால் அதைப் படிக்கும் ஆசிரியரின் பொழுது வீண் தானே? அது போலத்தான் பேச்சும். நேரில் கட்டுரையைக் கொடுத்துவிட்டு, ஆசிரியருடன்

உபசாரமாக நெடுநேரம் பேச முயல்வது அவரது ஒப்பற்ற காலத்தை வீண் செய்வதாகும்.

இளம் எழுத்தாளர்கள், தம் கட்டுரைகள், கதைகளை யெல்லாம் 'இந்த ஆசிரியர்கள்' படித்துப் பாராமலே திருப்பி யனுப்பிவிடுவதாக நினைக்கிறார் கள். உண்மை அப்படியன்று. பத்திரிகை ஆசிரியர்கள் அகன்று வேட்டையாடுகிறார்கள். 'எதோ? நல்ல சரக்கு எங்கே கிடைக்கும்?' என்று தேடித் தேடி அலைகிறார்கள். ஒவ்வொரு கை யெழுத்துப் பிரதியையும் பொறுமையோடு, நம்பிக்கையை இழக்காமல், படித்துப் பார்க்கி றார்கள். 'சரக்கு' இருந்தால் விட மாட்டார்கள்.

நம் தமிழ்நாட்டில் எழுத்தா ளர்களுக்கு எழுதக் கற்றுக் கொடுக்கும் ஸ்தாபனம் ஒன்றும் இப்பொழுது இல்லை.

அதனால் தலைசிறந்த எழுத் தாளருடைய எழுத்தை யெல்லாம் ஊன்றிப் படித்துப் பார்க்கவேண்டும். எங்கெங்கெல் லாம் எப்படி எப்படியெல் லாம் அவை கவர்ச்சியோடு விளங்குகின்றன என்பதை நன்கு கவனிக்கவேண்டும். இந்தப் பயிற்சியால் பல நுட்பங்களை எளிதில் உணர்ந்துகொள்ளலாம். இந்தில்தான் எல்லாம் படியும். ஆகையால் ஆரம்பத்திலேயே சின்னஞ் சிறு விஷயங்களில் ஓர் ஒழுங்கும், அதில் ஒரு பிடிப்பும் ஏற்படவேண்டும்.

அறிவு, சிந்தனை, பண்பு, உழைப்பு, திறமை முதலிய அனைத்தையும் பிரதிபலிப்பது எழுத்து. உயர்ந்த எண்ணங்களை யும் ஆழ்ந்த கருத்துக்களையும் சிறந்த யோசனைகளையும் தெளி வாக, வன்மையோடு வெளியிடு வது எழுத்து. ரசிகத்தன்மை யைத் தூண்டிக் கலையை வளர்ப் பது எழுத்து. நாட்டின் செல்வக் குழந்தைகளை அறிவுள்ள இளைஞ ராகவும், பொறுப்புள்ள பிரஜை களாகவும் உருவாக்குவது எழுத்து. உலகப் போக்கைப் பதிவு செய்வது எழுத்து. அதை ஒழுங்கு செய்வதும் எழுத்து.

எழுதும் கலை அழியாது. அதற்கு என்றுமே உயர்ந்த மதிப்பு உண்டு.

"இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்."

மகா கவி பாரதியாரின் வாக்கு இது. எழுதப் பழகு. நிறைய எழுது; நன்றாக எழுது.



கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(G) 155. கோவிந்தன், T. P., திருச்செங்கோடு. 156. கோபால கிருஷ்ணன், S. V., பாலக்காடு. 157. கோபாலன், D.R., ஈரோடு. 158. கோவிந்தசாமி, V. K., இலங்கை. 159. கிளாக்வின், கொழும்பு. 160. கோபால கிருஷ்ணன், D., ஆலப்புழை. 161. ஞானதுரை, M., தறை யூர். 162. கணபதி, A. S., (விலாசம் எழுதவில்லை) 163. கோபாலன், S. K., சிறுவயலூர், 164. கோபாலகிருஷ்ணன், K. S., கோயம்புத்தூர். 165. கோபாலன், D., திருச்சி. 166. கணேசன், வேங்கடேசன், ராமசந்திரன், A., சென்னை- 167. குணவேலு, K., பங்காருப்பேட்டை. 163. ஞான திலகம், யாழ்ப்பாணம். 169. கோபி பாய், சென்னை- 5. 170. கங்கா நாதன், V., சென்னை - 21. 171. குருநாதன், K., சேலம். 172. கோபால், R., சென்னை - 4. 173. கணபதி, V. K., கோபாலசமுத் திரம். 174. குஹதாஸன், K., சாவகச்சேரி. 175. கோவிந்தன், பத்மாஸனி, ஜகந்நாதன், K. S., சென்னை - 17. 176. கோவிந்த ராஜுலு, V., சென்னை-5. 177. கோபாலகிருஷ்ணன், R., சென்னை-4. 178. குணலக்ஷ்மி, சாவித்திரி, T. P., திருச்செங்கோடு. 179. கிரிஜா, S., சென்னை-4. 180. கோவிந்தராஜன், M. N., சேலம்.

(H.) 31. ஹரிஹரன், K., சென்னை-11. 32. ஹக்கீம், H., திருச்சிராப்பள்ளி. 33. ஹாரூன், V. N., திருச்சிராப்பள்ளி. 34. ஹேமா, L., சென்னை-4.

(I.) 25. இந்திரா, R., விஷ் ணம்பேட்டை. 26. இந்துமதி, K.S., சென்னை-4. 27. இந்துகாந்தி, R., சென்னை-4. 28. இந்திரா, காமு, மீரத் கண்டோன்மென்ட். 29. இளங்குமரி, K., திருநெல்வேலி. 30. இருதயம், உல்பேன். 31. இப் ராஹிம், R. M., கம்போலா, சிலோன். 32. இந்திரகுமார், R., மதுரை. 33. இந்திரா, A. T., கல்கத்தா-29. 34. இளங்கோ, C., பட்டுக்கோட்டை. 35. இளைஞர் மன்றம், நன்னிலம். 36. இந்தி ராணி, S., சென்னை-7. 37. இந்திரா, S., சென்னை-7. 38. இந்திரா, A., சென்னை-4.

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி......................

(தேதி, மாதம், வருஷம்)

செப்டம்பர் '51 கூபன் நெ:

(J.) 102. ஜயசங்கர், S., திருச்சிராப்பள்ளி. 103. ஜயகோபாலன், N., சென்னை-6. 104. ஜலீல், N. A., கோயம்புத்தூர். 105. ஜகந்நாதன், K., திருவாரூர். 106. ஜயாதேவி, ஜாம்ஷெட்பூர்-5. 107. ஜனார்த்தனன், K., அதிராம்பட்டணம். 108. ஜகந்நாதன், K., கோயம்புத்தூர். 109. ஜோதி, லக்ஷ்மணன், A., குடியாத்தம். 110. ஜிரோம் வின்ஸெண்ட், திருச்சி கண்டோன்மெண்ட். 111. ஜானகிராமன், V., சேலம். 112. ஜயராமசந்திரன், வை., தாமோதரா, சிலோன். 113. ஜயராமன், R., பொறையார். 114. ஜயாகாந்தன், S. K., கோயம்புத்தூர். 115. ஜயினலாவுத்தீன், M. A., வீரசோழன். 116. ஜயபால், ஜயநாதன், T., கோயம்புத்தூர். 117. ஜம்பகலக்ஷ்மி, வசந்தா, பிரேமா, வாசன், திருப்பாதிரிப்புலியூர் 118. ஜகந்நாதன், G., கோயம்புத்தூர். 119. ஜயநாராயணன், பம்பளப்பிட்டியா. 120. ஜயா, சிங், N., சாவகச்சேரி. 121. ஜயராஜ், M., கோயம்புத்தூர். 122. ஜயராமன், M. S., கொழும்பு. 123. ஜயராமன், D., சென்னை-21. 124. ஜயசேகரன், S., புதுச்சேரி. 126. ஜனார்த்தன ராவ், A., தஞ்சாவூர். 127. ஜயவேல், S., ஆண்டிப்பட்டி. 128. ஜயலக்ஷ்மி, N., கோயம்புத்தூர். 129. ஜம்னுதேவி, L., திருமங்கலம். 130. ஜயலக்ஷ்மி, N., கரூர். 131. ஜயராமன், N., கிருஷ்ணகிரி. 132. ஜயா, A., குடியாத்தம். 133. ஜயராம், A., சிங்கநல்லூர். 134. ஜகதீசன், M., சிலோன். 135. ஜகந்நாதன், S., அகரம்.

(K.) 201. கிருஷ்ணமூர்த்தி, A., மனஸாபுரம். 202. கிருஷ்ணமூர்த்தி, C., சென்னை-4. 203. கிருஷ்ணமூர்த்தி, T. A., மதுரை. 204. கண்ணன், அலர்மேல்மங்கை, N., ஸ்ரீவைகுண்டம். 205. குழந்தைசாமி, K. S., மலேயா. 206. கமலா, லக்ஷ்மி, S., சென்னை-4. 207. கிருஷ்ணன், ருக்மிணி, A. R., கோயம்புத்தூர். 208. காளிதாஸ், சாருதத்தன், R., சென்னை-14. 209. கனகேசன், சார்புதீன், T., சென்னை-14. 210. கமலா, V., சென்னை-17. 211. கிருஷ்ணமூர்த்தி, R., சென்னை-4. 212. கல்யாணி, V., சென்னை-21. 213. கமலாக்ஷன், L., சென்னை-14. 214. கல்யாணசுந்தரம், S., சென்னை-6. 215. கமலா, S., சென்னை-4. 216. கிருஷ்ணன், M. S., சென்னை-18.

(மீதி அடுத்த இதழில்)

★★★★★★★★★★★★★★★

கண்ணன்

கழகம்

புதிதாகச் சேரும் அங்கத்தினர்கள் 1951-ஆம் வருஷக் கூபன்களைத்தான் அனுப்ப வேணடும். 1950-ஆம் வருஷக் கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★

கிரிக்கெட் கற்றுக்கொள்

ராம்சிங்

போட்டோ:
எம். டி. வின்ஸென்ட்

ஸ்குயர் கட் ஆப் தி பிரண்ட் புட்
(Square Cut of the Front Foot)



1. பொதுவான ஆரம்ப நிலை.



2. பந்து எப்படி வருகிறது என்பதையே அவர் கண்கள் கவனிக்கின்றன. தலை அசையாமல் இருக்கிறது.



3. கொஞ்சம் நிமிர்ந்து விக்கெட்டுக்கும் பின்னால் போகும்படி மட்டையைச் சேர்த்துப் பிடித்து ஓங்கியிருக்கிறார். பலம் முழுவதும் சேர்த்து அடிக்க அப்பொழுது தான் முடியும்.



4. முன்கால் முன்னால் நகர்ந்து வந்திருக்கிறது. மட்டையையும் வீசி அடிக்க வாகாய் உயர்த்திப் பிடித்திருக்கிறார்.



5. முன்கால் விரல் அடிக்க வேண்டிய திசையில் திரும்பியிருக்கிறது. தலையைக் குனிந்து கொண்டு, பந்து தரையை நெருங்குவதை அவர் கவனிக்கிறார்.



6. பந்து வரும் திசையில் இன்னும் நகர்ந்து கொள்கிறார். கைகள் நேராக நீட்டியிருக்கின்றன. பந்து அவர் அடிக்குத் தப்பாது.



7. கைகள் இப்பொழுதும் சேர்ந்தே இருக்கின்றன. பந்து மட்டையில் அடிபடும் போது மட்டை கீழ் நோக்கிக் கவிழ்ந்திருக்கிறது. இப்படியிருந்தால்தான் பந்தைத் தரையோடு சேர்த்து அடிக்க முடியும்.



8. பந்தை அடித்தாகி விட்டது. தலை, மார்பு முன் கால் கட்டை விரல் எல்லாவற்றையும் கவனியுங்கள். இதே நிலையில்தான் பந்தை அடிக்க வேண்டும்.

பாப்பா, அழாதே!

அழ. வள்ளியப்பா

பாப்பா, பாப்பா, அழாதே!
பலூன் தாரேன், அழாதே!
கண்ணே பாப்பா, அழாதே!
காசு தாரேன், அழாதே!
பொன்னே பாப்பா, அழாதே!
பொம்மை தாரேன், அழாதே!
முத்துப் பாப்பா, அழாதே!
மிட்டாய் தாரேன், அழாதே!

*　*　*

என்ன வேணும், சொல்பாப்பா?
எல்லாம் வேணுமோ, சொல்பாப்பா?
சரி, சரி பாப்பா தருகின்றேன்.
சிரிசிரி கொஞ்சம், சிரிபாப்பா!

பொழுதுபோக்கு

டி. வி. ரங்கசாமி



(விடைகள் 8-ஆம் பக்கம்)

'டைம்பீஸ்' பரிசுப் போட்டி

கண்ணனில் ஒவ்வொரு தடவையும் புது மாதிரியான போட்டி ஒன்று வெளியிடுகிறோம். இந்தப் போட்டியில் நீங்கள் எல்லாரும் கலந்துகொள்ளலாம். படிக்கத் தெரியாத நாள் முதல் நீங்கள் எவ்வளவோ கதைகள் கேட்டு வருகிறீர்கள். உங்கள் தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, மாமா, அத்தை, அண்ணா, வாத்தியார் முதலியோர் எவ்வளவோ கதைகள் உங்களுக்குச் சொல்லியிருப்பார்கள். வேடிக்கையான கதைகள், வீர தீரச் செயல்கள் நிறைந்த கதைகள் - இப்படி எவ்வளவோ அற்புதமான கதைகளைக் கேட்டிருப்பீர்கள். அவற்றில் நம் தமிழ் நாட்டுக் கதையாக, சுவாரஸ்யம் நிறைந்த கதையாக இருக்கவேண்டும். கண்ணனில் ஆறு பக்கத்துக்கு மேல் போகக்கூடாது. இதுவரையில் வேறு பத்திரிகைகளில் வந்ததாக இருக்கக்கூடாது. உங்கள் ஞாபகத்திலிருந்து நீங்களே சொந்தமாக எழுதியதாக இருக்கவேண்டும். பழங்காலக் கதையாக இருக்கவேண்டும். 'அலாவுதீனும் அற்புத விளக்கும்' என்று கேட்டிருக்கிறீர்களா? அதுபோன்ற கதையாக இருக்கலாம். சரித்திர சம்பந்தமானதாகவும் இருக்கலாம். எதுவாக இருந்தாலும் நம் தமிழ் நாட்டில் வழங்கும் கதையாக மட்டும் இருக்கவேண்டும்

மற்ற நிபந்தனைகள் எப்போதும் போலத்தான். கதை கிடைக்க வேண்டிய கடைசித் தேதி: 5-10-'51.

கேட்டீர்களா!

பாரதியாரின் நூல்கள்:

பாரதியாரின் நூல்கள் மவுண்ட்ரோடு கவர்ன்மெண்ட் பிரஸ் பிரசுரப் பகுதியில் விற்பனை செய்யப்படுகின்றன. இப்போது பிரசுரமாகியுள்ள புத்தகங்கள் செலவான பின்னர், குறைந்த விலையில் கிடைக்கும்படி அச்சிட சென்னை சர்க்கார் உத்தேசித்திருக்கிறார்கள்.

பாரதி விழா:

செப்டம்பர் மாதம் பாரதியார் பிறந்த தினமாகிய 11-ஆம் தேதி அன்றும் மறுநாள் 12-ஆம் தேதியன்றும் பாரதிவிழாவை எட்டையபுரத்தில் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். விழாவுக்கு ஸ்ரீ ரா. பி. சேதுப்பிள்ளை தலைமை வகிப்பார். சென்னை மந்திரி கனம் பெருமாள்சாமி ரெட்டியார் விழாவைத் துவக்கி வைப்பார்.

வீரர் வ. ரா.:

வ. ரா. அவர்கள் பெரிய சிந்தனையாளர். சிறந்த எழுத்தாளர். தலை சிறந்த சீர்திருத்தவாதி. இவர் ஆகஸ்ட் மாதம் 23-ஆம் தேதி தம் 63-ஆவது வயதில் காலமாகிவிட்டார். வ. ரா. புதுவையில் இருந்தபோது மகான் அரவிந்தருடனும் வ. வே சு. ஐயருடனும் மகாகவி பாரதியாருடனும் சேர்ந்து உழைத்தவர். பாரதியாரின் பெருமையைத் தமிழர்கள் நன்கு உணரும்படி செய்தவர்களில் முக்கியமானவர். தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்துக்கு மகத்தான தொண்டு புரிந்தவர். தாய் நாட்டின் சுதந்தரத்துக்கும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் சமூகத்தின் பண்பாட்டுக்கும் 40 வருஷங்களாக உழைத்த வீரர்.

5 வயது மேதை:

லக்ஷ்மணபுரிக்கு அருகில் உள்ள அலிகாரில் ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் வேதத்தையும் கீதையையும் சரியான உச்சரிப்புடன் கவர்னர் முன்னிலையில் வாசித்துக் காட்டினானாம். இந்தச் சிறுவனுக்குக் கல்வி புகட்டும் பொறுப்பை சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் என்று கவர்னர் உறுதி கூறியிருக்கிறார்.

ஸ்ரீ ஜயந்தி மகிமை:

"எப்பொருளிலும் கண்ணனைக் காண்போம். அப்படிக் காண அந்தக் கண்ணனே நமக்குத் துணையாக இருக்கிறான்" என்று ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரிய ஸ்வாமிகள் ஸ்ரீ ஜயந்தி விழாவை முன்னிட்டு ஒரு செய்தி அருளியிருக்கிறார்.



நன்றாகத்தான் இருக்கும்

கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு,

அநேக வந்தனம். சென்னையில் நடந்த கூட்டத்துக்கு இங்கிருந்து நாங்கள் பலர் வந்திருந்தோம். கூட்டம் பலே ஜோர். இந்த ஊரில் உள்ள அங்கத்தினர் சிலருக்குள் ஒற்றுமையில்லாமல் இருக்கிறது. இது பற்றி நீங்கள் எழுதினால் நன்றாக இருக்கும். ஐக்குவை அட்டைப் படமாக ஒரு தடவை போட்டால் பைண்டு பண்ணி வைக்க நன்றாக இருக்கும்.

—A. சுப்பிரமணியன், S. 305, பெரம்பூர்.

* * *

கோவை அங்கத்தினர்கள்

ஆசிரியர் அவர்களுக்கு நமஸ்காரம்.

கோவையில் நூற்றுக் கணக்கான கழக அங்கத்தினர்கள் இருந்தும் நான் முன்பு தெரியப்படுத்தியதற்குச் சிலர்தான் எழுதியிருக்கிறார்கள். அதனால் செயற்குழு அமைக்க முடியவில்லை. இதுவரை விண்ணப்பம் செய்யாத நண்பர்கள் 15-9-51 க்குள் தங்கள் பெயரையும் விலாசத்துடன் நம்பரையும் கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்ள வேண்டும். —V. ராசப்பன், (R. 283), IV Form B., S. M. H. School, Coimbatore.

[தவறாமல் எல்லாரும் எழுதுவார்கள் என்று நம்புகிறேன். ஆ-ர்)

* * *

வேடிக்கை

CEY | LON

LON | DON

சிலுவையின் இரண்டு புறமாகவும் இந்த இரண்டு பெயர்களைப் படிக்கலாம்.

எண்களைத் தமிழ் இலக்கத்தில் எழுதிவிட்டு வந்த சோமுவும் ராமுவும் சந்தித்தார்கள். "எங்கேடா போகிறாய், ஏழும் ஐந்தும் மையன்னா?" என்றான் சோமு.

"விட்டுக்குப் போகிறேண்டா, ஒண்ணே முக்கால் தையன்னா" என்றான் ராமு. புரிகிறதா?

ஏழு—எ, ஐந்து—ரு, மை! =எருமை. 1—க, $\frac{3}{4}$—ழு, தை! =கழுதை

—ஜாப்ரி, S. M. (J. 75)

* * *

சதுரக் குளம்

80 கஜம் நீளம் அகலமுள்ள ஒரு சதுரமான குளம் இருக்கிறது. அதைத் தாண்டுவதற்குப் பாலம் இல்லை. ஆனால் 60 கஜம் நீளமுள்ள இரு மரப் பலகைகள் உள்ளன. இவைகளை வைத்துக் கொண்டு அதற்குப் பாலம் போடமுடியுமா?

—S. ரங்கநாதன், R. 568, தஞ்சாவூர்.

[விடை கடைசிப் பக்கத்தில்.]

* * *

பரிசு பெற்றவர்கள்

ஜூலை 29-ஆம் தேதி சென்னையில் நடந்த கூட்டத்தில் பரிசு பெற்ற கண்ணன் கழக அங்கத்தினர்கள்:

1. S. K. ஜயலக்ஷ்மி (J. 74): பிங்பாங் செட்
2. P. தேவகி (D. 135): ஜௌஸ் பிட்டர்
3. தாராபாய் (T. 2): ஸ்கிப்பிங் ரோப்
4. A. S. கைலாசம் (K. 217): புட்பால்
5. C. D. நரசிம்மன் (N. 37): குளோப்
6. K. R. பாலசுப்பிரமணியன் (B. 126): டிரேட்
7. தாரகராம் (T. 21): ரேஸ் குளோப்
8. V. K. பானு (B 195): லக்கி பைவ்
9. யோகநாதன் (Y. 2): கிரிக்கெட் குல்லாய்
10. P. V கோபாலகிருஷ்ணன் (G. 114) ,,
11. R. லலிதா (L. 81): ஹாண்ட் பாக்

* * *

விளையாட்டுப் பந்தயம்

கழகத் தலைவர் அவர்களுக்கு, வணக்கம்:

இவ்வூரிலுள்ள கண்ணன் கிளைக் கழக அங்கத்தினர்கள் ஒரு கூட்டமாக உறையூருக்குக் காலை 10-45 மணிக்குப் புறப்பட்டுச் சென்று நாச்சியார் அம்மன் கோயிலைச் சுற்றிப் பார்த்துவிட்டு மாலை 3 மணிக்குத் திரும்பினோம். முதல் நாள் நடந்த கால் பந்து விளையாட்டில் நம் கிளைக் கழக 'டீம்' தான் ஜயித்தது என்பதைச் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

—உபதலைவர், கிளைக் கழகம், திருச்சி.

விசித்திர மிருகம்

சித்திரம் போட்டார் ஒருவர். பல மிருகங்களின் பல பாகங்களை ஒன்ருக இணைத்துவிட்டார். எங்கே, இந்தப் படத்தில் எவ்வளவு மிருகங்களின் பாகங்கள் இருக்கின்றன, கண்டுபிடியுங்கள்! (ஆ-ர்.)

[விடை கடைசிப் பக்கத்தில்]

* * *

விடுகதை

மரமாய் நிற்பது நான்தானே
மளிகையில் விற்பது நான்தானே
மாசி மகத்திலும் நான்தானே
மார்கழி பஜனையிலும் நான்தானே
பூஜை விழாவிலும் நான்தானே
புஷ்பக் கடையிலும் நான்தானே
மைசூரில் வாழ்வது நான்தானே
மஞ்சள் நிறமும் நான்தானே
மணமும் குணமும் நான்தானே
மார்பினில் மகிழ்வது நான்தானே

விடை: [illegible]

ப. ராகவேந்திரன், சென்னை 5

* * *

மலர் உண்டு

ஆசிரியர் அவர்களுக்கு அநேக நமஸ்காரம்.

இந்த வருஷம் தீபாவளி மலர் உண்டா? போன வருஷம் கண்ணன் தீபாவளி மலர் எனக்குக் கிடைக்கவில்லை. இந்த வருஷமும் தவற விடக் கூடாது என்பது என் எண்ணம்.

—எம். எஸ். திவ்ரன் முத்து முகம்மது, சிவகங்கை.

[பேஷாக இந்த வருஷம் மலர் உண்டு. கையில் எதற்கும் தயாராக ஒரு ரூபாய் இருக்கட்டும். விலை அதற்குமேல் போகாது உங்கள் ஊர் ஏஜெண்டிடம் சொல்லி வைத்துவிடு. ஆ—ர்.]

மாட்டு வண்டி

ஒரே கோட்டில் வரைந்த படம்



டி. வி. ரங்கசாமி, ஆரணி.

* * *

விடைகள்

சதுரக் குளம்

முடியும்; இப்படிப் பலகைகளைக் குறுக்கே போட்டால் தாண்டி விடலாம்.

* * *

விசித்திர மிருகம்

அணில் முகம், நாயின் வால், பூனையின் காது, புலியின் உடல், பசுவின் கால், குதிரையின் பிடரி ஆகியவை.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

இப்பொழுது வெற்றிகரமாக நடைபெறுகிறது

REG. No. M. 554

பொன் மொழிகள்
மேரிக்கு மாங்காய் பிடிக்காது,
ஜிம்முக்கு ஜாம் பிடிக்காது,
கிருஷ்ணனுக்கு கறியைக் கண்டால் ஆகாது,
ராஜா வெறுப்பது கிழங்கு வகைகள்,
ஆனால் எல்லோரும் விரும்புவது
ஒன்றே ஒன்று உண்டு.
அதுதான் தித்திப்பான
ஸாவரின் ஸ்வீட்கள்
Sovereign
தேசத்தினர் தேர்ந்தெடுத்தது
KCPZ-5
ஸாவரின் ஸ்வீட்ஸ்